பக்கங்கள்: 21

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 புரட்டாதி 02 ஞாயிற்றுக்கிழமை 18.09.2022 கதிர் 315

**இது ரகசியம் அல்ல!**

இன்று தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழு வவுனியாவில் கூடுகின்றது. அடுத்த தேசிய மாநாட்டை நடத்துவது குறித்து இந்தக் கூட்டத்தில் இறுதி முடிவு எட்டப்படக்கூடும்எனஎதிர்பார்க்கப் படுகின்றது.

☞2

## பொருளாதாரத் தீர்வ தருவேன் என

# மக்கள் தன்னை நம்புகின்றனர் என்கின்றார் ஜனாதிபதி ரணில்

கொழும்பு,செப்ரெம்பர் 18

நாடு எதிர்கொண்டுள்ள நெருக்கடிக்கு நான் தீர்வைக் காணவேண்டும் என நாட்டின் பெரும்பான்மையான மக்கள் விரும்புகின்றனர், அவர்கள் என்னை நம்புகின்றனர் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டுச் செய்தியாளருக்கு வழங்கியுள்ள பேட்டியில் இதனைக் குறிப்பிட்டுள்ள ஜனாதிபதி சர்வதேச நாணய நிதியத்தை நாடுங்கள் என நானே சரியான விடயங்களை தெரிவித்தேன்,இதன் காரணமாகவே என்னை ஆதரிப்பது குறித்து நம்பிக்கை காணப்படுகின்றது எனக் குறிப்பிட்டுள்ளார்.



☞2

## புலிகளின் தங்கத்தைத் தேடி இருபாலையில் அகழ்வுப் பணி



யாழ்ப்பாணம் - இருபாலை டச்சு வீதியில் உள்ளவீடொன்றின்வளாகத்துக்குள் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதங்கள் மற்றும் தங்க

☞2

## ரஷ்ய படையினரின் பிடியிலிருந்த ஏழு இலங்கை மாணவர்கள் மீட்பு

ரஷ்ய படையினரின் பிடியிலிருந்த ஏழு இலங்கை மாணவர்கள் மீட்கப்பட்டுள்ளனர் என உக்ரைன் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

☞2

## மாவீரர்களின் தியாகங்களில் அரசியல் இலாபம் தேடாதீர்!

**P2P இயக்கம் அறிக்கை மூலம் வலியுறுத்து**

மாவீரர்களின் தியாகங்களில் அரசியல் இலாபம் தேட வேண்டாம் என்று பொத்துவில்

☞19

## அரசியல் கட்சியாக புளொட் பதிவாகி 34 ஆண்டுகள் பூர்த்தி

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் (புளொட்டின்) அரசியல் பிரிவு 'ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி' என்னும் பெயரில் ஓர் அரசியல் கட்சியாக பதிவு செய்து இன்று 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையுடன் 34 ஆண்டுகள் நிறைவடைகின்றன என்று அக்கட்சியின் செய்தி குறிப்பு ஒன்று தெரிவித்தது.

## கையெழுத்துப் பேரணி நேற்றுத் திருமலையில்!



பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்க கோரி இலங்கை தழிழரசு கட்சியின் வாலிபர் முன்னணி, சர்வஜன நீதி அமைப்பு ஆகியன இணைந்து

☞19

## வட்டுக்கோட்டை விபத்தில் இரு பெண்கள் அருந்தப்பு!

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வட்டுக் கோட்டைச் சந்திப் பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற விபத்தில் ஸ்கூட்டி ஒன்று பகுதியளவில்

☞19

## ஓமந்தையில் ரயில் மோதி குடும்பஸ்தர் உயிரிழந்தார்



வவுனியா, ஓமந்தையில் நேற்றிரவு 10 மணியளவில் ரயில் மோதி குடும்பஸ்தர் ஒருவர் மரணமடைத்துள்ளார்.

யாழில் இருந்து கொழும்பு நோக்கி சென்ற ரயில் இரவு 10 மணியளவில்

☞19

## உயிரிழந்த நிலையில் யானை கிரான் பகுதியில் கண்டுபிடிப்பு



மட்டக்களப்பு மாவட்டத்தின் கிரான் பிரதேச செயலாளர் பிரிவில் முள்ளிவட்டுவான் பிரதேசத்தில் 4 வயது மதிக்கத்தக்க யானை ஒன்று உயிரிழந்த நிலையில் நேற்றுக் கண்டுபிடிக்கப்பட்டதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

☞19

## மொட்டுக் கட்சி தவிசாளராக ரஞ்சித் பண்டார



ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தவிசாளர் பதவிக்கு அக்கட்சியின் தேசிய பட்டியல்

☞19

## திலீபனின் நினைவு தின ஏற்பாட்டுக்கான பொதுக் கட்டமைப்பை உருவாக்கக் குழு

**நேற்றைய கூட்டத்தில் பஷீர் காக்கா தலைமையில் தெரிவு**



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,செப்.17

தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வை நடாத்துவதற்கான பொதுக் கட்டமைப்பை

☞19

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் பிரி. மகாராணிக்கு வவுனியாவில்அஞ்சலி





மறைந்த இங்கிலாந்து மகாராணிக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வொன்று நேற்று வவுனியாவில் இடம் பெற்றது.

தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகளின் சங்கத்தினரின் ஏற்பாட்டில் சுழற்சி முறையில் உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் கொட்டகையிலேயே இந்த அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் மகாராணியின் திருவுருவ படத்திற்கு தீபமேற்றி மலர் அஞ்சலி செலுத்தினர்.



## கோணேஸ்வர ஆக்கிரமிப்புக்கு எதிரான பாதயாத்திரை ஆரம்பம்

(இ.கலையமுதன்)

யாழ்ப்பாணம்,செப்.18

திருகோணமலை திருக்கோணேஸ்வரம் ஆலய ஆக்கிரமிப்பைத் தடுத்து நிறுத்தும் நோக்கில் யாழ்ப்பாணத்தில் இருந்து அடியவர்களின் யாத்திரை

☞19

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசிய மாநாடு என்றால் புதிய தலைவர், செயலாளர் என்ற இழுபறி எல்லாம் உண்டு அல்லவா?

இதற்கு மேலும் தேசிய மாநாட்டை நடத்தாமல் இழுத்தடிக்க முடியாது என்ற இக்கட்டில் அதை எப்படியும் இந்த ஆண்டுக்குள் நடத்தி முடித்து விடும் கட்டாயம் கட்சி தலைமைக்கு ஏற்பட்டிருக்கின்றது.

1949 டிசம்பர் 18ஆம் தேதி தமிழரசுக் கட்சியைத் தந்தை செல்வா ஸ்தாபித்தார். அதை நினைவு கூரும் முகமாக அடுத்த மாநாட்டை அடுத்த டிசம்பர் 17 மற்றும் 18ஆம்திகதிகளில்நடத்துவதற்குஇன்றைய கூட்டத்தில் தீர்மானிக்கப்படக் கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இன்றைய கூட்ட ஏற்பாடுகள் குறித்து அறிவதற்காக சமூக ஊடகம் ஒன்றின் செய்தியாளர் ஒருவர் கட்சியின் சிரேஷ்ட தலைவர் ஒருவருக்கு நேற்று தொலைபேசி அழைப்பு எடுத்தார்.

முதல் கேள்வி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பற்றியதாக இருந்தது. அதைக் கேட்டதும் அந்த சிரேஷ்ட தலைவர் பதில் கேள்வி ஒன்றை அந்தச் செய்தியாளரிடம் போட்டார். செய்தியாளருக்குத் தூக்கி வாரி போட்டது.

"தமிழ் தேசிய கூட்டமைப்பா? அது எங்கே இருக்கின்றது?" - என்று கேட்ட அந்த சிரேஷ்ட தலைவர் மேலும் விவரித்தார்.

"நீங்களும் நாங்களும் கருதும் கூட்டமைப்பில் மூன்று கட்சிகள்தான் அங்கம் வகிக்கின்றன. தமிழரசு, ரெலொ, புளொட் ஆகியவைதான் அவை.

"இதற்கிடையில்புளொட்டும்ரெலோவும் சேர்ந்து விக்னேஸ்வரனின் கட்சி, சுரேஷின் கட்சி, ஸ்ரீகாந்தாவின் கட்சி ஆகியவற்றோடு இணைந்து செயல்படுகின்றன. அவை ஐந்தும் கையெழுத்து வைக்கும் பொது கடிதங்களில் தமிழரசு தலைவர் மாவை சேனாதிராசாவும் தம்பாட்டில் போய்க் கையெழுத்து வைக்கிறார். அதன் மூலம் அதை உத்தியோகபூர்வமாக ஆறு கட்சிக் கூட்டாக மாற்றியுள்ளார் மாவை சேனாதிராசா. இப்போது ஆறு கட்சிகளின் பொது இணைப்பாளராக ரெலோ பிரமுகர் குருசாமி சுரேந்திரன் ஜெனிவாவுக்கும் போய்விட்டார்.

"மாவையரின் ஆசீர்வாதத்தில் ஐந்து கட்சிக் கூட்டணி, தமிழரசின் பெயரையும் சேர்த்துக் கொண்டு ஆறு கட்சிக் கூட்டமைப்பாக மாறிவிட்டது

"மாவையரின் கணக்குப்படி ஆறு கட்சிக் கூட்டணியில் தமிழரசு, ரெலொ, புளொட் எல்லாம் உள்ளடங்கும் என்றால் இனி தமிழ் தேசியக் கூட்டமைப்பு எதற்கு? அதில் உள்ள மூன்று கட்சிகளும் ஆறு கட்சிக் கூட்டுக்குள்ளும் அடக்கம் என்பதால் இனி ஆறு கட்சிகள் கூட்டுத்தான். மூன்று கட்சிகளின் கூட்டமைப்புக்கு அர்த்தம் இல்லை என்பதுதானே அர்த்தம்?" - என்றார் அந்த சிரேஷ்ட தலைவர்.

விழி பிதுங்கி நின்றார் நமது செய்தியாளர் நண்பர்.

இந்த விவகாரமும் இன்று தமிழரசின் மத்திய குழுக் கூட்டத்தில் சூடாகத் தொடரும் என்று எதிர்பார்க்கலாம்.

***

சும்மா இருக்க வருமானம் வருவது என்பது சந்தோஷமான விடயம்தானே...! அப்படி ஒரு 25 லட்சம் ரூபா சும்மா இருந்து உழைத்து இருக்கின்றது யாழ் மாநகர சபை. இதுதான் விவகாரம்:-

ஜப்பானியத் தூதரகம் யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு வழங்கிய பணத்திற்கு வங்கி வட்டி 25 லட்சம் ரூபா மாநகர சபைக்கு கிடைத்துள்ளது.

ஜப்பான் அன்பளிப்பாக வழங்கும் 4 கொம்பக்ட்ர வாகனங்களை நாட்டிற்குள் கொண்டு வரும் சமயம் சபைக்கு ஏற்படும் செலவுப் பணத்திற்காக ஒரு கோடியே 43 லட்சத்து 26 ஆயிரத்து 466 ரூபா பணத்தை ஜப்பான் தூதரகம் 2019ஆம் ஆண்டு மார்ச் மாதம் மாநகர சபைக்கு வழங்கியது.

அந்தப் பணத்தை யாழ்ப்பாணம் மாநகர சபை தேசிய சேமிப்பு வங்கியின் யாழ்கிளையில் 100067752849 இலக்கத்தில் வைப்புச் செய்தது.

அந்தப் பணத்திற்கு இதுவரை 25 லட்சத்து 35 ஆயிரத்து 407 ரூபா 75 சதம் வட்டி வழங்கப்பட்டுள்ளமை தற்போது கண்டறியப்பட்டுள்ளது.

இந்த வாகனங்களை ஜப்பானில் இருந்து தருவிக்க முடியாத சிவப்பு நாடா நிலைமை இங்கு இருப்பதால் இந்தப் பணத்தை உடனடியாக ஜப்பானிய தூதரகத்துக்குத் திருப்பிக் கொடுக்கும்படி யாழ். மாநகர சபைக்கு அறிவுறுத்தல் வழங்கினார் வடக்கு ஆளுநர். தாம் அறிவுறுத்தல் வழங்கியும் அது ஏன் இன்னும் செயல்படுத்தப்படவில்லை என்று விளக்கத்தைக் கேட்டு அடுத்த கடிதத்தையும் அனுப்பினார் அவர்.

அவரது அறிவுறுத்தல் கடிதங்கள் யாழ் மாநகர சபையை பொறுத்த வரை எருமை மாட்டில் மழை பெய்த கதை மாதிரியே ஆகி விட்டன.

ஆளுநர் தரப்புக்குப் பின்வரும் விடயங்கள் விளங்கப்படுத்தப்பட்டு இருக்கின்றன என்று அறிய வந்தது:-

1.இது சபையின் விடயம். மக்களுடைய பிரதிநிதிகளைக் கொண்ட சபை எடுக்க வேண்டிய நடவடிக்கை விவகாரத்தில் ஆளுநர் தலையிட முடியாது; தலையிடக்கூடாது.

2. இப்படிக் கட்டளை அறிவுறுத்தல் வழங்குவதற்கு இது அரசின் கட்டமைப்பு ஊடாக வந்த நிதியும் அல்ல. ஆகவே ஆளுநர் அதில் அதிகாரம் பிரயோகிக்க இடமே இல்லை.

3. மாநகர சபை ஆணையாளர் இரண்டரை லட்சம் ரூபாவுக்குக் குறைந்த கொடுப்பனவையே சபையின் தழுவு அங்கீகாரத்தின் பேரில் தற்றுணிவில் வழங்கலாம். அதேபோன்று மேயரின் அதிகாரம் 10 லட்சம் ரூபா வரையான நிதிக் கொடுப்பனவுக்குத்தான் உண்டு.

அதற்கு மேற்பட்ட தொகையாயின், சபை இயங்கும் போது சபையின் அனுமதியுடன்தான் அதைச் செய்ய முடியும்.

4. சபை கூடி அங்கீகரித்தால் மட்டுமே அக்கொடுப்பனவு ஜப்பானுக்கு மீளளிக்கப்படும்.

5. விடயம் சபையின் கவனத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. அவர்களின் தீர்மானமே முடிவாகும்.

- இவ்வாறு ஆளுநருக்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதிகார வரையறை தெரியாமல் காலை விட்டால் வாங்கிக் கட்ட வேண்டி இருக்கும் என்பதை நமது ஆளுநர் இன்னும் புரிந்து கொள்ளதமை துரதிஷ்டமே...!

**- மின்னல் -**

## மக்கள் தன்னை ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன் காரணமாகவே என்மீது நம்பிக்கையுள்ளது, நான் செய்துமுடிப்பேன் என்ற நம்பிக்கை காணப்படுகின்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்க இல்லங்களை எரிப்பதன் மூலம் பிரச்சினைகளிற்கு தீர்வை காண முடியாது என குறிப்பிட்டுள்ள அவர், ஜனாதிபதியின் இல்லத்தை ஆக்கிரமித்தவர்கள் அல்லது எனது வீட்டை எரித்தவர்கள் நாடு எதிர்கொண்டுள்ள நெருக்கடிகளிற்கு தீர்வை கண்டிருக்கமாட்டார்கள் எனவும் தெரிவித்துள்ளார்.

சட்டத்தை மீறியவர்களே கைதுசெய்யப்படுகின்றனர். இந்த கைதுகளை நான் செய்யவில்லை. அதனைப்பொலிஸாரிடம் விட்டு விட்டேன். உங்கள் நாட்டை போல பொலிஸார் அவர்களிற்கு எதிராகக் குற்றச்சாட்டுகளை சுமத்த திட்டமிட்டுள்ளனர். அனைத்தும் சட்டபூர்வமாக இடம்பெறுகின்றன. - என ஜனாதிபதி அப்பேட்டியில் மேலும் தெரிவித்துள்ளார்.

## புலிகளின் தங்கத்தைத் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நகைகள் புதைக்கப்பட்டுள்ளன என்ற சந்தேகத்தில் அகழ்வுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணம் நீதிவான் ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் கோப்பாய் பொலிஸாரின் ஏற்பாட்டில் இந்த



அகழ்வுப் பணி நேற்று முற்பகல் 9.30 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டது . மதியம் 2 மணியுடன் அது நிறுத்தப்பட்டது.

இருபாலை டச்சு வீதியில் உள்ள வீடொன்றின் வளாகத்துக்குள் தங்க நகைகள் புதைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்து 6 பேர் அகழ்வுப் பணிக்கு தயாராகிய நிலையில் பொலிஸ் புலனாய்வுப் பிரிவின் தகவலின் அடிப்படையில் அவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களில் இராணுவத்தில் உள்ளவர்களும் அடங்கியிருந்தனர்.

இந்த நிலையில் கோப்பாய் பொலிஸாரின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றின் அனுமதியுடன் நேற்று முற்பகல் அகழ்வுப் பணி ஆரம்பிக்கப்பட்டது.

புதையல் அகழ்வதற்காக விசேட அணியினர் வந்திருந்த நிலையில், அகழ்வு பணிகளுக்காக கனரக வாகனங்களும் பயன்படுத்தப்பட்டது.

மதியம் 2 மணி வரையில் அகழ்வுப் பணிகள் யாழ்ப்பாண நீதிவான் முன்னிலையில் இடம்பெற்ற போதும், எவ்வித மான பொருள்களும் மீட்கப்படாத நிலையில் அகழ்வு பணிகள் இடைநிறுத்தப்பட்டன.

## ரஷ்ய படையினரின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உக்ரேனின் குப்யான்ஸ்க் மருத்துவ கல்லூரியில் கல்வி பயின்ற வேளை ரஷ்ய படையினரால் பிடிக்கப்பட்ட ஏழு இலங்கை மாணவர்கள் மீட்கப்பட்டுள்ளனா என அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த மார்ச் மாதம் முதல் ரஷ்யப் படையினரின் பிடியிலிருந்த இலங்கை மாணவர்களே மீட்கப்பட்டுள்ளனர். மார்ச் மாதம் இவர்களை கைதுசெய்த படையினர் அவர்களை நிலத்தடி மறைவிடமொன்றில் வைத்திருந்தனர் கார்கிவ் மீட்கப்பட்டதை தொடர்ந்தே இவர்கள் மீட்கப்பட்டுள்ளனர்.

அவர்களிற்கு உரிய மருத்துவ வசதிகளை வழங்கிவருகின்றோம் என அவர் தெரிவித்துள்ளார்.













# கண்ணீர் அஞ்சலி



மலர்வு
06.01.1948

உதிர்வு
16.09.2022

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை பிறப்பிடமாகவும்
கோவில்குளத்தை வசிப்பிடமாகக் கொண்ட

அமரர்.

## இராசையா திருச்செல்வம்

அன்னாரின் ஆத்மா சந்தி அடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**வவுனியா கோவில்குளத்தில் எதிர்வரும் திங்கட்கிழமை**
**இறுதிக்கிரியைகள் நடைபெறும்.**

மகள் - கஜனி குடும்பத்தினர் (லண்டன்)
0044752490096
தீபன்- 0094770757314
Home No- 0094242052501

காலைக்கதிர்
Kalaikkathir

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# ரணில் மீது நம்பிக்கையா?

"நாட்டின் பெரும்பான்மையான மக்கள் நாடு எதிர்கொண்டுள்ள நெருக்கடிக்கு நான் தீர்வைக் காண வேண்டும் என விரும்புகின்றனர்."

– இப்படித் தெரிவித்திருக்கின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

வெளிநாட்டுச் செய்தியாளர் ஒருவருக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.

"சர்வதேச நாணய நிதியத்தை நாடுங்கள் என்று சரியான சமயத்தில் நானே தெரிவித்திருந்தேன். இதன் காரணமாக என்னை ஆதரிக்கும் நம்பிக்கை மக்கள் மத்தியில் காணப்படுகின்றது" – என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவர் கூறிய விடயங்கள் சில உண்மைதான்.

சர்வதேச நாணய நிதியத்திடம் சரணாகதி அடையாவிட்டால் மோசமான நிலைமை வரும் என்று நேரத்துடனே நாடாளுமன்றத்தில் தமது கட்சியின் சார்பில் ஒரேயொரு எம்.பியாக இருந்த போது கூறியவர் ரணில்தான் என்பது மறுக்க முடியாதது. அவரின் அரசியல் அனுபவம் அப்படி அவரை ஆலோசனை கூற வைத்திருக்கும். அதனை மறுப்பதற்கு இல்லை.

அதேசமயம், பொருளாதார நெருக்கடியில் மிக மோசமான பாதிப்பை எதிர்கொண்டிருக்கும் சாமானியன் ஒவ்வொருவனும் இந்தப் பிரச்சினை – நெருக்குவாரம் – விரைந்து தீர்க்கப்பட வேண்டும் என்றே பிரார்த்திப்பான். இப்போது அதிகாரத்துக்கு – பதவிக்கு – வந்திருக்கும் ஜனாதிபதியாவது இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்க மாட்டாரா என்று ஆதங்கம் – அங்கலாய்ப்பு – ஒவ்வொரு பிரஜையின் மனதிலும் இருக்கும்.

இந்த வகையில் இப்போது ஜனாதிபதியாக இருக்கும் ரணில் விக்கிரமசிங்கவாவது இதய சுத்தியுடன், நேர்மையாக, பொருத்தமான முடிவுகளை உறுதியாக எடுத்து, இந்தப் பிரச்சினைகளுக்கு நேரத்துடன் விரைந்து தீர்வு காண மாட்டாரா என்ற ஏக்கம் மக்கள் மனதில் உள்ளதுதான். அதுவும் மறுக்க கூடியது அல்ல.

ஆனால், அதன் அர்த்தம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறுவது போல அவர் மீது மக்கள் முழுமையான நம்பிக்கை வைத்து விட்டார்கள் என்பது அல்ல.

ரணில் ஆட்சிக்கு வந்த சமயம் மக்கள் பல விடயங்களை எதிர்பார்த்தனர். குறைந்த அமைச்சர்கள், நிறைவான, நேர்மையான அரச நிர்வாகம், சர்வகட்சி ஆட்சி என்று பல நம்பிக்கைகள் – எதிர்பார்ப்புகள் – ஆவல்கள் – மக்கள் மத்தியில் காணப்பட்டன.

அவை எல்லாவற்றையும் நிறைவு செய்யாமல் கோட்டை விட்டுவிட்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, மக்களின் ஆதரவு தம்மோடு என்று இப்போது நம்பிக்கை கொள்வதிலோ பீற்றிக்கொள்வதிலோ அர்த்தம் இல்லை.

மக்களின் முன்னால் பரீட்சைக்காக அவர் வந்திருக்கின்றார் என்பது உண்மைதான். ஆனால் அதன் அர்த்தம் அவர் பரீட்சையில் சித்தி அடைந்து விட்டார் என்பது அல்ல.

அதற்கு அவர் பயணிக்க வேண்டிய தூரம் நீண்டது. அதை, சரியான வழியில் பயணித்து, நாட்டுக்கு உரியதை – நல்லதை – அவர் வெற்றிகரமாகச் செய்து முடிப்பாரா என்பதற்குக் காலம்தான் பதில் கூற வேண்டும்.

# மரணம் சம்பவிக்கும் முன்னர் அரசியல் கைதிகளுக்கு பிணை வழங்கி விடுதலைக்கு உத்தரவாதமளிக்குக!

## சிவாஜிலிங்கம் வேண்டுகோள்




கொழும்பு மகசின் சிறைச்சாலையில் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டு வரும்தமிழ்அரசியல்கைதிகளின்நிலைமை மோசமடைவதால் மரணம் சம்பவிக்கும் முன்னர் அவர்களை பிணையில் விடுவிக்கும் உத்தரவாதத்தை வழங்க வேண்டும் என வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஊடகசந்திப்புஒன்றில்கலந்துக்கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும் தெரிவிக்கையில் –

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டுசிறையில்அடைக்கப்பட்ட தமிழ் அரசியல் கைதிகள் 12 பேர் தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றார்கள். அவர்களில் ஐந்து பேர் உடல் நலக்குறைவால் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதுடன் ஒருவர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகிறார் என அறிய கிடைக்கின்றது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் கைது செய்யப்படும் சிங்களவர்கள் பிணையில் விடுவிக்கப்படுவதும், மரண தண்டனை விதித்தவர்களுக்கு பொது மன்னிப்பு வழங்குவதும்,கொலை குற்றச்சாட்டுகளில் கைது செய்பவர்களுக்கு பிணை வழங்குவதும் இடம்பெற்று வருகின்றது.

தற்போது சிறையில் உண்ணாவிரதம் இருக்கும் தமிழ் கைதிகள் ஆகக்குறைந்தது தங்களை பிணையிலாவது விடுவிக்குமாறு கோருகின்றார்கள். தமது உறவுகள் சிறையில்உண்ணாவிரதம் இருக்கின்றநிலையில் அவர்களின் உறவுகள் வீடுகளில் உறவினர்களுடன் சேர்ந்து உண்ணாவிரதத்தில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

ஆகையால் அவர்களின் குடும்பத்துக்கோ அல்லது சிறையில் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் உடல்நிலை மோசமடைந்து மரணம் ஏற்படுவதற்கு முன்னர் அவர்களுக்கு பிணை வழங்குவதற்கான உத்தரவாதத்தை சம்பந்தப்பட்டவர்கள் வழங்க முன்வர வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(உண்ணாவிரதம் கைவிடமுன்னர்
இந்தப் பேட்டி வழங்கப்பட்டது)





# இலங்கைக்கு பெருமை சேர்த்த வீரர்களுக்கு குவியும் பணப்பரிசு!

ஸ்ரீலங்கா கிரிக்கட் நிறுவனம் இலங்கை வலைபந்தாட்ட அணி வீராங்கனைகளுக்கு தலா 20 லட்சம் ரூபா பணப்பரிசு வழங்கியுள்ளது.

ஆசிய கிண்ணங்களை வென்ற இலங்கை கிரிக்கெட் மற்றும் வலைபந்தாட்ட அணி வீர, வீராங்கனைகளை கௌரவிக்கும் நிகழ்வு வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கொழும்பு நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

பொதுநலவாய நாடுகள் போட்டித் தொடரில் வெள்ளிப் பதக்கம் வென்ற வீரருக்கு ஒரு கோடி ரூபாவும், வெண்கலப் பதக்கம் வென்ற வீரருக்கு 50 லட்சம் ரூபாவும் வழங்கப்பட்டது.

அபேக்ஸா புற்று நோய் வைத்திய சாலைக்கு 5 லட்சம் அமெரிக்க டொலர்கள் நன்கொடையாக வழங்கப்பட்டது. ஸ்ரீலங்கா கிரிக்கட் இந்த நன்கொடைகளையும் பணப்பரிசில்களையும் வழங்கியுள்ளது.

அணிகளையும் வீர, வீராங்கனைகளையும் பயிற்றுவித்த பயிற்றுவிப்பாளர்களுக்கும் பணப்பரிசில் வழங்கப்பட்டுள்ளது.

# மகாராணி 2 ஆவது எலிசபெத்தின் இறுதிச் சடங்கு ரணிலின் பங்குபற்றல் வரலாற்றில் இடம்பிடிக்குமாம்!



இரண்டாம் எலிசபெத் மகாராணியின் இறுதிச் சடங்கில் கலந்துகொள்ளும் அரச தலைவர்கள் மத்தியில் பிரித்தானிய வரலாற்றுப் புத்தகத்தில் இணைவதற்கான அரிய வாய்ப்பு இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்குக் கிடைக்கவுள்ளது.

எலிசபெத் மகாராணியின் முடிசூட்டு விழாவில் கலந்துகொண்ட தம்பதிகளின் மகனான ரணில் விக்கிரமசிங்க, எலிசபெத் மகாராணியின் இறுதிச் சடங்கில் கலந்துகொள்வதற்காக பிரித்தானிய வரலாற்றுப் புத்தகத்தில் இணையவுள்ளார்.


நெதர்லாந்தின் முன்னாள் ராணி இளவரசி பீட்ரிக்ஸ், இதேபோன்ற வரலாற்றைக் கொண்ட அரச குடும்பத்தைச் சேர்ந்தவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பெற்றோர்களான எஸ்மன்ட் விக்கிரமசிங்க மற்றும் நளினி விக்கிரமசிங்க ஆகியோர் பெப்ரவரி 1952 இல் எலிசபெத் மகாராணியின் முடிசூட்டு விழாவில் பிரதமர் டட்லி சேனாநாயக்கவுடன் கலந்துகொண்டனர்.

இளவரசி பீட்ரிக்ஸின் பெற்றோரும் அரச குடும்பத்தாராக முடிசூட்டு விழாவில் கலந்துகொண்டனர். உலக வரலாற்றில் அரச குடும்பத்துக்கு வெளியே இவ்வாறானதொரு வாய்ப்பைப் பெற்ற முதல் நபர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆவார்.

மகாராணியின் முடிசூட்டு விழாவின் போது, இலங்கையின் அப்போதைய பிரதமர் டட்லி சேனநாயக்காவுக்கு நடந்த ஒரு சிறப்பு நிகழ்வு தொடர்பாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் கூறியிருந்தார்.

அந்த வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க லண்டன் சென்று ராணியின் இறுதி ஊர்வலத்தில் இலங்கை மக்கள் சார்பாக கலந்துகொள்ளவுள்ளார்.



# கிளிநொச்சியில்
# ஐஸ்வர்யம் பெருவிருந்து மண்டபம்
# Ishwaryam Banquet Hall



Tel:- 021 228 3701, 071 7354308

Whatsapp:- 071 7736 4308

No.315, Kandy Road, Kilinochchi





- அன்பான வரவேற்பு
- தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
- இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
- இந்தியன் உணவுவகைகள்
- Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.

சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்

# ISHWARYAM BANQUET HALL
## BANQUET MEALS HALL





## FULL OPTION

**MAIN DIHES**

Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style

**DESSERT**

| | |
|---|---|
| ice Cream Cup | - 60/= |
| Fruit Salad | - 60/= |
| I ce Cream & Fruit Salad | - 100/= |
| Cream Caramel | - 120/= |

**SPECIAL MENU PACKAGE**

**BEVERAGES**

| | |
|---|---|
| jUICE 200 ml | - 70/= |
| Milk Drink | - 70/= |
| Cocacola M | - 70/= |
| Pepsi M | - 70/= |
| Swchpees Tin | - 250/= |
| Coca Cola Tin | - 250/= |

# முழு அரசியல்வாதிகளையும் நிராகரிக்கும் பிரசார முழக்கத்துக்கு மஹிந்த எதிர்ப்பு!

225 அரசியல்வாதிகளையும் நிராகரிக்க வேண்டும் என்ற பிரசார முழக்கத்தை தாம் எதிர்ப்பதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.



தாம் போராட்டத்தை ஆதரித்தமை எப்படி என்பது அனைவருக்கும் தெரியும். நான் சொந்தமாக ஒரு பதாகையைக் கூட வைத்திருந்தேன். ஆனால் அவர்கள் மே 9 அன்று அரசியல்வாதிகளின் வீடுகளைத் தாக்கினர். அவர்கள் என் வீட்டைத் தாக்கவும் வந்தனர் என்று தேசப்பிரிய கூறியுள்ளார்.

அரசியல்வாதிகள் தேர்தல்களில் போட்டியிடுவதற்காக வேட்புமனுக்களைக் கையேற்றமைக்காகவே தமது வீட்டையும் தாக்க முனைந்தனர் எனத் தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

எனவே இளைஞர்கள் ஆவேசத்துடன் போராடலாம். எனினும் போராட்டத்துக்கு முன்னதாக போராட்டம் செய்வது எப்படி என்பதை கற்றுக் கொள்ள வேண்டும் என்று மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.














# சிறுவர் கதிர்



## குட்டிக் கதை ஒன்று படித்துப் பாருங்கள்



# முட்டாள் வேலைக்காரன்

ஓர் ஊரில், வணிகன் ஒருவன் இருந்தான். பணக்காரனான அவன் சரியான கஞ்சன். எனவே, முட்டாளான ஒருவனை வேலைக்காரனாக வைத்திருந்தான். வணிகன் ஒருநாள் அவனை அழைத்து, "நம் வண்டியை எடுத்துக்கொண்டு பனங்காட்டுக்குப் போ. அங்கே பலர் பனைமரங்களை வெட்டி வண்டியில் ஏற்றிக் கொண்டு இருப்பர். அதேபோல் நீயும் மரங்களை வெட்டிக் கொண்டு வா!" – என்றான்.

அப்படியே அவனும் வண்டியை ஓட்டிக்கொண்டு சென்றான். அங்கே சிலர் மரங்களை வெட்டி வீழ்த்திக் கொண்டு இருந்தனர். சிலர், கீழே கிடக்கும் மரங்களை முயன்று வண்டியில் தூக்கிப் போட்டுக்கொண்டிருந்தனர். இதைப் பார்த்ததும் வேலைக்காரனால் சிரிப்பை அடக்க முடியவில்லை.

என்ன இவர்கள் எல்லாரும் முட்டாள்களாக இருக்கின்றனர். மரம் வெட்டும் போதே அதற்குக் கீழாக வண்டியை வைத்தால் மரம் அதில்சரியாகவிழும்.வீணாக ஒருமுறைபூமியில்கிடக்கும் மரத்தை வண்டியில் ஏற்ற வேண்டாமே! என்றுநினைத்தான்.

என் திட்டத்தை இவர்கள் கண் முன்னாலேயே செய்து காட்டி, நான் எத்தகைய அறிவாளி என்பதைப் புரிய வைப்பேன் என்ற எண்ணத்தில், தான் வெட்ட வேண்டிய பெரிய மரத்தை தேர்ந்தெடுத்தான்.

கோடாரியால் அந்தப் பனை மரத்தின் அடிப்பகுதியைப் பாதி அளவு வெட்டி முடித்தான். பிறகு, அந்த மரம் விழக்கூடிய இடத்திற்கு நேராக மாட்டுடன் வண்டியை நிறுத்தினான். மரம் வெட்டிக் கொண்டிருந்த மற்றவர்கள், ஏன் இவன் இப்படிப் பைத்தியக்கார வேலை செய்கிறான்!' என்று நினைத்தனர்.

சிறிது நேரத்தில் அந்த மரம், சடசட'வென்ற சத்தத்துடன் வண்டியின் மீது வேகமாக விழுந்தது. அவ்வளவுதான், வண்டி தூள் தூளானது. கால் உடைந்து குற்றுயிரும் குலை உயிருமாக மாடு துடித்துக் கொண்டிருந்தது. இதைக்கண்டு அவன் திகைத்து விட்டான். தன் திட்டத்தில் என்ன குறை என்று அவனால் கண்டுபிடிக்க முடியவில்லை.

என் திட்டம் நல்ல திட்டம் தான். வண்டிக்குத்தான் வலிமை இல்லாமல் போய்விட்டது என்ற முடிவுடன் வீடு திரும்பினான். நடந்ததை அறிந்த வணிகன், முட்டாளாக இருக்கிறாயே! இப்படி செய்யலாமா? என்று வேலைக்காரனைத் திட்டினான்.

சில நாட்கள் சென்றன. திடீரென்று அந்த ஊரில் மண்ணெண்ணெய் பஞ்சம் வந்துவிட்டது.

தன்னிடம் இருக்கும் இருபத்தைந்து பீப்பாய் எண்ணெயைப் பதுக்கி வைத்தால் நிறைய லாபம் கிடைக்கும்!' என்று நினைத்தான் வணிகன். உடனே வேலைக்காரனை அழைத்து, கடையில் இருக்கும் மண்ணெண்ணெய் எல்லாவற்றையும் இன்றிரவு நம் தோட்டத்தில் பள்ளம் தோண்டிப் புதைத்துவிடு. யாருக்கும் தெரியக் கூடாது!" என்றான்.

வணிகன் சொன்னபடியே, நள்ளிரவில் பெரிய பள்ளம் தோண்டினான் வேலைக்காரன். ஒவ்வொரு பீப்பாயாக உருட்டிச் சென்று அதிலுள்ள எண்ணெயைப் பள்ளத்தில் ஊற்றினான். இப்படியே எல்லாப் பீப்பாய்களில் உள்ள எண்ணெயையும் ஊற்றி முடித்தான்.

இப்போது அவன் உள்ளத்தில், இந்தக் காலிப் பீப்பாய்களை என்ன செய்வது? இது குறித்து முதலாளி ஒன்று சொல்லவில்யலையே!' என்ற சிந்தனை எழுந்தது.

சரி, அவரையே கேட்டுவிடுவோம்' என்ற எண்ணத்தில் நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்த வணிகனை எழுப்பினான்.

ஐயா! நீங்கள் சொன்னபடி மண்ணெண்ணெயைப் பள்ளம் தோண்டிப் புதைத்துவிட்டேன். காலி பீப்பாய்களை என்ன செய்வது என்று கேட்டான். வணிகனுக்குச் சிறிது சிறதாக உண்மை புலப்படத் தொடங்கியது. ஐயோ, மண்ணெண்ணெய் எல்லாம் பேச்சே!' என்று அலறிய வணிகன், அன்றே அவனை வேலையிலிருந்து நீக்கினான்.

# விஞ்ஞானிகளும் கண்டுபிடிப்புகளும்




1. மின்காந்தக் கொள்கை – மாக்ஸ்வெல்
2. இலத்திரன் – J.J.தொம்சன்
3. மின்குமிழ் – தோமஸ் அல்வா எடிசன்
4. ஒட்சிஜன், நைட்ரஸ் ஆக்ஸைடு – J.B.பிரீஸ்ட்லி
5. ஈர்ப்பு விதி – நியூட்டன்
6. பெனிசிலின் – சேர் அலெக்சாண்டர் பிளெமிங்
7. கோள்களின் இயக்க விதி – கெப்ளர்
8. சூரியக் குடும்பம் – கோபர் நிக்கஸ்
9. ஆவர்த்தன வரிசை அட்டவணை – மெண்டலீவ்
10. நீராவி இஞ்சின் – ஜேம்ஸ் வாட்
11. புவிஈர்ப்புவிசை – சேர் ஐசக் நியூட்டன்
12. சுருக்கெழுத்து – சேர் ஐசக் பிட்மேன்
13. கதிரியக்கம் – ஹென்றி பெக்குரல்
14. ரேடார் – சேர் ராபர்ட் வாட்சன் வாட்
15. செல் – ராபர்ட் ஹூக்
16. தொலைபேசி – கிரகம்பெல்
17. மக்கள் தொகை கோட்பாடு – மால்தஸ்
18. ஜெட் விமானம் – பிராங்க்விட்டில்
19. குருடர்களுக்கான எழுத்து முறை – லூயி பிரெய்லி
20. தொலைக்காட்சி – J. L. பெயர்டு
21. அம்மை தடுப்பூசி – எட்வர்டு ஜென்னர்
22. போலியோ தடுப்பு மருந்து – டாக்டர். ஜோன்ஸ் சால்க்
23. டைனமைட் – ஆல்பர்ட் நோபல்
24. இன்சுலின் – பேண்டிங்
25. இதயமாற்று அறுவை சிகிச்சை – டாக்டர் கிறிஸ்டியன் பெர்னார்ட் (இதயமாற்று அறுவை சிகிச்சை செய்துகொண்டவர் P.K.சென்)
26. இரத்த ஒட்டம் – வில்லியம் – ஹார்லி
27. குளோரோபார்ம் – ஹாரிஸன் சிம்ப்ஸன்
28. வெறி நாய்க்கடி மருந்து – லூயி பாஸ்டயர்
29. எலக்ட்ரோ கார்டியோ கிராம் – எயின் தோவன்
30. பாக்றீரியா – லீவன் ஹூக்
31. குவாண்டம் கொள்கை – மாக்ஸ் பிளாங்க்
32. எக்ஸ் – ரே – ராண்ட்ஜன்
33. புரோத்திரன் – ரூதர்போர்டு
34. நியூத்திரன் – ஜேம்ஸ் சாட்விக்
35. தெர்மா மீற்றர் – பாரன்ஹூட்
36. ரேடியோ – மார்க்கோணி
37. கார் – கார்ல் பென்ஸ்
38. குளிர்சாதனப்பெட்டி – ஜேம்ஸ் ஹாரிசன்
39. அணுகுண்டு – ஆட்டோஹான்
40. ரேடியம், ரேடியோ கதிர்வீச்சு – மேடம் மேரி கியூரி
41. ஹெலிகொப்டர் – பிராக்கெட்
42. லாக்ரதம் – ஜான் நேப்பியர்



# கடல் விழுங்கிய கற்கால குடியிருப்பு

பிரிட்டனை ஒட்டிய ஐரோப்பாவுக்கு அருகில் உள்ள வட கடலில் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் கடல் விழுங்கிய கற்கால குடியிருப்பு ஒன்றை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

10 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் உலகின் பெரும் பகுதி பனிக் கட்டியாய் உறைந்திருந்தது. அது கடைசி பனிக் கட்டிக் காலம் என்று அழைக்கப்படுகிறது. இந்தக் கால கட்டத்தில் வாழ்ந்த வேட்டைச் சமூகத்தின் குடியிருப்பு ஒன்றை கடல் விழுங்கியது. சமீபத்தில் வடக்கு கடலில் ஆர்வி பெல்ஜிகா என்ற ஆராய்ச்சி கப்பலில் பயணித்த விஞ்ஞானிகள் சரித்திர காலத்துக்கு முந்தைய வனப் பகுதியையும் வேட்டைச் சமூக குடியிருப்பு ஒன்றையும் கண்டறிந்தனர்.

பல ஆயிரக்கணக்கான சதுர கிலோ மீற்றர் பரப்புள்ள டாக்கர்லேண்ட் என்று அழைக்கப்படும் இந்த நிலப் பகுதியை கண்டறிந்திருப்பது புதிய வியப்பை ஏற்படுத்தி இருக்கிறது. ஆய்வில் ஈடுபட்ட விஞ்ஞானிகள், இது ஆச்சரியம் மட்டு அல்ல, அந்த கால கட்டத்தைச் சேர்ந்த பல பொருட்களையும், படிமம் ஆகிவிட்ட வனப் பகுதியையும் கண்டுபிடித்துள்ளோம் என்றார்கள்.

12 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் பனிக் கட்டியாய் உறைந்திருந்த வடக்குக் கடல் பகுதியில் பனி உருகத் தொடங்கிய போது வெளிப்பட்டது இந்த வனப்பகுதி. ஆனால், அதன் பிறகு கடல் நீர் அளவு உயரத் தொடங்கியது. 8 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் கடல் அளவு உயர்ந்ததில் இந்த வனப்பகுதியும், கற்கால குடியிருப்பும் கடலுக்குள் மூழ்கியது என்கிறார்கள்.

# RADIANT DAWN

A Sunday Supplement in English to Kalaikkathir

Page I English for all Sunday the 18th of Septmber 2022



We welcome students' articles in word for publication

-Editor-

kalaikkathiredu@gmail.com


# The Summer Olympic Games



Have you ever heard of judo? Judo is a martial art. It is a sport that does not use weapons. Instead, judo uses holds and body movements. In that way, it is a little like karate. Judo was started in 1882 by Dr. Jigoro Kano. He studied martial arts in Japan and developed judo from them. You do not have to be big and strong to learn judo because judo is about timing. It is also about movement and skill. Judo experts can win competitions even when their opponents are bigger. They know that timing and skill are more important than size. Anyone can learn judo, even little children. There are classes for people of all ages and all ability levels. Judo is very popular—it is even an Olympic sport.

1. What is this text mostly about?
   - A. karate   B. judo
   - C. the Olympics   D. Japan
2. What does judo use instead of weapons?
   - A. size
   - B. martial arts
   - C. holds and body movements
   - D. the Olympics
3. What is a martial art?
   - A. a sport that uses self defense without weapons
   - B. a body movement
   - C. a little child
   - D. a sport that uses a ball
4. What is an expert?
   - A. a sport
   - B. a person who is not good at something
   - C. a person who is new at something
   - D. a person who is very good at something
5. Which is the root word in competitions?
   - A. petition   B. comp
   - C. compete   D. pet

## The Devious Wolf in a Sheep's Skin



Once a wolf found a great difficulty to have the vigilance of the shepherd and his dogs. But one day luckily, it found the skin of a sheep that had been flayed and thrown aside, so the wolf with an agile mind decided to put it on over its own pelt. It strolled down among the sheep. The lambs that belonged to the sheep, whose skin the wolf was wearing, began to follow the wolf in the sheep's clothing. The lambs which followed the wolf were taken little apart from the flock. Since the wolf found a good opportunity, it soon made a meal of them. For some time he succeeded in deceiving the sheep, and enjoying hearty meals.

***Moral : Sometimes a deceptive but witty brain is useful.***

Have you ever seen a movie that had a sword fight? The actors who used the swords probably learned to fence. Fencing is a sport that uses a special kind of sword. Fencers wear special clothes. Those clothes protect the fencers. The object of a fencing match is to touch your opponent with your weapon as many times as possible. Whoever gets the most touches is the winner. Fencing takes a lot of practice. There are several fencing moves that fencers have to learn. For example, fencers learn how to try to touch their opponents and how to defend against an opponent's touch. They learn how to move around, both backward and forward. Fencing started in France, so most of the words used in fencing are French. Fencing is an Olympic sport.

1. Which statement is not true about fencing?
   - A. Fencing uses mostly German words.
   - B. Fencing is an Olympic event.
   - C. Fencing uses a special kind of sword.
   - D. The object of fencing is to touch your opponent with your sword.
2. What do fencers have to learn?
   - A. how to speak French
   - B. how to ride a bicycle
   - C. how to ride on a horse
   - D. how to touch their opponents with a weapon
3. What does the suffix –er mean in fencer?
   - A. the study of
   - B. a speaker of
   - C. someone who
   - D. formerly
4. Which two words are antonyms?
   - A. protect and defend
   - B. fencing and French
   - C. backward and forward
   - D. move and clothes
5. Which is not a plural noun in this text?
   - A. opponent's
   - B. swords
   - C. actors
   - D. fencers

**Great spirits have always encountered violent opposition from mediocre minds - Albert Einstein**

# The Summer Olympic Games








Every four years, a very special event occurs. Athletes from all over the world gather together. They compete in their sports. They try to win medals. That special event is called the Summer Olympic Games. It is also called the Olympiad. Many sports are a part of the Olympics. Athletes row, fence, and ride horses. They swim, run, and play soccer. Judo and boxing are also part of the Summer Olympics. So are baseball and gymnastics.

How did the Olympics start? Nearly 3,000 years ago in Ancient Greece, people got together every four years. They raced and boxed. They competed to see who could throw a spear the farthest. There were other events, too. After many years, the Greeks stopped having the games. For a long time, there were no games. Then in 1896, the modern Olympics began. The first modern Olympic Games were held in Athens. Athens is the capital of Greece. Since 1900, the games have been held every four years. The games have only been cancelled three times—in 1916, 1940, and 1944. In those years, the games could not be held because of World War I and World War II.

Where are the Olympics held? Each Olympiad is held in a different city. Cities that want to host the Olympics apply to have the games. They apply to a special group of people. This group is called the International Olympic Committee. This group decides which city will get the games. The Games have been held in cities all over the world. They have been held in Paris, France. They have been held in Los Angeles, California. They have been held in Rome, Italy, and in Tokyo, Japan. They have been held in many other places, too. In 2016, the Games will be held in Rio de Janeiro, Brazil. Wherever the Summer Games are held, millions of people will be watching them.

## *Read the text and then answer the questions.*

If you like to be out on the water, you might enjoy the sport of rowing. In rowing, teams of people race one another in special boats. Rowing can be done on lakes, rivers, or even the ocean. To move their boats, rowers sit facing backward on special seats in their boats. They use paddles called oars that are designed for rowing and are attached to the boat. The oars push the boat through the water. Rowers have to work together as a team. Each person on the team has to row in the right direction at exactly the right time. Otherwise, the boat will not move forward. Rowing is good for your body; it helps make your arm and back muscles strong. Rowing also helps to strengthen your leg muscles. Rowing is popular wherever there are lakes and rivers. It is one of the oldest Olympic sports

1. Which word would tell a reader more about this text?
   A. river B. arm
   C. muscles D. rowing
2. Where is rowing popular?
   A. wherever there are lakes and rivers
   B. in the desert
   C. only in big cities
   D. only in the ocean
3. What are special paddles that rowers use to move the boat?
   A. muscles
   B. rowers
   C. boats
   D. oars
4. Which is an antonym of strong?
   A. weak B. big
   C. muscular D. strengthen
5. Which word is used in the text to indicate the effect of something?
   A. even B. designed
   C. otherwise D. each

# Queen Elizabeth’s funeral will be held on Monday 19 September

**The event will take place at 11am at Westminster Abbey at the end of an official 10-day period of mourning**



Charles proclaimed King – latest updates

Floral tributes left by the public outside Windsor Castle on Saturday.

The Queen’s state funeral will take place at Westminster Abbey at 11am on Monday 19 September, Buckingham Palace has announced, on a day of mourning that the King has declared will be a bank holiday.

King Charles III and Camilla, the Queen Consort during the Accession Council at St James's Palace, London.

At present the Queen lies in the ballroom of Balmoral Castle in an oak coffin covered with the Royal Standard for Scotland and with a wreath of flowers laid on top. It is a “scene of quiet dignity”, allowing her Balmoral estate staff to pay their last respects, a palace spokesperson said.

It is the start of a journey of processions, guards of honour, church services and vigils as the nation begins its long goodbye to the Queen and her coffin is moved over the coming days to Westminster Hall for a four-day lying in state before her funeral.

During this time, the King will be carrying out “all the necessary state duties”. But “his main focus will be leading the royal family, the nation, the realms and the Commonwealth in mourning Her Majesty the Queen,” his spokesperson said.

On Monday, he and the Queen Consort will travel to Westminster Hall where, as is traditional, both Houses of Parliament will meet to express their condolences at the death of the Queen, and the King will make his reply.



On Sunday, the coffin will travel to the Palace of Holyroodhouse in Edinburgh, a journey of six hours by road, via Aberdeen. Six of her Balmoral gamekeepers will carry the coffin from the Balmoral ballroom to the hearse.

It will remain in the throne room at Holyroodhouse until Monday afternoon, before a procession to St Giles’ Cathedral on Edinburgh’s Royal Mile, with the King, Queen Consort and other members of the royal family walking behind. At 3pm there will be a service, attended by the King and family members, during which the crown of Scotland will be placed on the coffin.

The Queen will then lie at rest at St Giles’ Cathedral for 24 hours, enabling the people of Scotland to pay their last respects, with vigils mounted by the military. That evening, the King and members of the royal family will mount their own vigil.


How the day of King Charles's official proclamation unfolded – video report

02:29

How the day of King Charles's official proclamation unfolded – video report

Advertisement

The following evening the Queen’s coffin will be flown to London, accompanied by the Princess Royal, and arriving at Buckingham Palace at 8pm, the palace said. It will be received by a guard of honour, with the King, Queen Consort and other family members watching, before being carried to the Bow Room, where a rota of chaplains will keep watch.



In the early afternoon on Wednesday, the coffin – adorned with the Imperial State Crown, along with a wreath of flowers – will be taken by procession to the Palace of Westminster for the lying in state, where it will remain for four days until the morning of the funeral.

The King, members of the royal family and senior staff of the Queen and King’s households will walk in silence behind the coffin as it follows a route along Queen’s Gardens, the Mall, Horse Guards Parade and Horse Guards Arch, Whitehall, Parliament Street, Parliament Square and New Palace Yard.



(See page 11)



Throughout the procession, guns will be fired at Hyde Park by the King's Troop Royal Horse Artillery and Big Ben will toll. The coffin will be carried in procession from the gun carriage to the catafalque positioned in the centre of Westminster Hall by a bearer party.

During the lying in state, a continuous vigil will be mounted around the catafalque from the Household Division, the King's Body Guards of the Honourable Corps of Gentlemen at Arms, the King's Bodyguard for Scotland, the Royal Company of Archers and the King's Bodyguard the Yeomen of the Guard.

The Earl Marshal, the Duke of Norfolk, who has overall responsibility for the funeral, which the Queen herself would have approved, said he and others involved "will carry out our duty over the coming days with the heaviest of hearts".

"But also, with the firmest of resolve to ensure a fitting farewell to one of the defining figures of our times; a monarch whom we were truly privileged to have had as the head of state of our country and the realms, and head of the wider Commonwealth," he said.

"While His Majesty the King was speaking about his family, I think it applies to us all when he said in his broadcast yesterday that 'we owe her the most heartfelt debt'. I think we can, in some way, repay that debt by carrying out her last wishes in delivering Her Majesty the Queen's funeral."

On his visit to Scotland, the King will have an audience with the first minister, followed by an audience with the presiding officer of the Scottish parliament.

The King and the Queen Consort will then attend the Scottish parliament to receive a motion of condolence.

On Tuesday 13 September they will travel by air to Belfast and later visit Wales on Friday 16 September.





The government confirmed the day of the funeral would work in the same way as other bank holidays, and that there would be no statutory entitlement to time off, with employers able to include it as part of a worker's leave entitlement.





The Department for Business said the announcement did not interfere with existing contractual arrangements between employers and workers, but that they would "expect employers to respond sensitively to requests from workers who wish to take the day of the funeral off work".

They said that schools would be expected to close.

# அடிமுதுகு பகுதியை வலுவாக்கும் பயிற்சி



இருசக்கர வாகனம் ஓட்டுபவர்களுக்கு முதுகுவலி ஏற்பட வாய்ப்புகள் அதிகம். சிலருக்கு அடிமுதுகில் வலி அதிகமாக இருக்கும். அதிலும், தொடர்ந்து அதிக தூரம் வண்டியிலேயே பயணம் செய்ய நேரிடும்போது கை, கால், மூட்டு, தோள்பட்டை போன்ற பகுதிகளில் தசைகள் இறுகி வலி ஏற்படும்.

இந்த வலியில் இருந்து நிவாரணம் பெற வீட்டிலேயே, 20 நிமிடங்களில் செய்யக்கூடிய பயிற்சி உள்ளது. அந்த பயிற்சி தரையில் நேராக குப்புறப் படுத்துக்கொண்டு, வலது கையை பக்கவாட்டில் உடலை ஒட்டியபடியும், உள்ளங்கை மேல் நோக்கியும் வைக்க வேண்டும். இடது கையை முன்பக்கமாக நீட்டி தரையைத் தொடும்படி வைக்க வேண்டும்.

இப்போது, இடது கை மற்றும் வலது காலை மேலே உயர்த்த வேண்டும். கால்களை வளைக்கக் கூடாது. இப்படி 20 முதல் 30 தடவைகள் செய்ய வேண்டும். ஒரு பக்கம் செய்த பின்னர் 5 விநாடிகள் ஓய்வு எடுத்த பின்னர் மறுபக்கம் பயிற்சியை செய்ய வேண்டும்.

பலன்கள்: முதுகெலும்பு, முதுகில் உள்ள நரம்புகள் வலுவடையும். அடிமுதுகு வலி குறைவும். இரத்த ஓட்டம் சீராகும். முழங்கால் மூட்டுப் பகுதி வலுப்பெறும்.

### இதயநலம் காக்கும் உடற்பயிற்சிகள்

உடலின் உயிர்வளித் தேவையைப் பெருக்கும் உடற்பயிற்சிகளை உயிர் வளி பெருக்கும் உடற்பயிற்சிகள் **(Aerobic Exercise)** என்று சொல்வதுண்டு.

இத்தகைய உடற்பயிற்சிகளின் மூலமாக உடலில் உள்ள உறுப்புகளுக்குத் தேவையான உயிர்வளியைப் பன்மடங்காக பெருக்க முடியும். இதனால் இதயமானது தனக்குத் தேவையான ரத்தத்தையும், சத்துகளையும் பெற முடியும்.

பொதுவாக இதயத்தை வலுவாக்கும் உடற்பயிற்சிகளை நடைப்பயிற்சி **(Walking)**, மெல்லோட்டம் **(Jogging)**, சைக்கிள் பயிற்சி **(Cycling)**, நீச்சல் பயிற்சி **(Swimming)** என நான்கு வகைகளாகப் பிரிக்கலாம். இவற்றில் உங்கள் வயது, உடல் அமைப்பு, ஓய்வு நேரம், உடல் ஆற்றல் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு உங்களுக்கு ஏற்ற உடற்பயிற்சியை நீங்கள் தேர்ந்தெடுத்துக்கொள்ள முடியும்.

### நடைப்பயிற்சி

நடைப்பயிற்சியில் **Trekking, Leisure Walking, Race Walking, Power Malking** என பலவகைகள் உள்ளன. இவற்றில் உங்களுக்கு எந்த வகைப் பயிற்சி ஒத்துவருகிறதோ அதைத் தொடர்ச்சியாகச் செய்து வர வேண்டும்.

மற்ற வகையான உடற்பயிற்சிகளுடன் ஒப்பிடும் போது நடைப்பயிற்சி மிகவும் எளிமையானதாக இருக்கிறது. இந்தப் பயிற்சியை எந்த இடத்திலும் மிகவும் எளிமையாக மேற்கொள்ள முடியும். இப்பயிற்சியை மேற்கொள்ள ஒரு ஜோடி காலணிகள் இருந்தால் போதும்.

எளிமையான உடற்பயிற்சியாக இருந்தாலும் இதனால் கிடைக்கும் நன்மைகள் பல. அன்றாடம் நடைப் பயிற்சி மேற்கொள்வது, உடலின் எடையைக் குறைக்க துணை புரிவதோடு தெளிவாகச் சிந்திக்கவும் உதவுகிறது. மேலும் இதயத் தசைகளை வலுவாக்கவும், ரத்த ஓட்டத்தை அதிகரிக்கவும் உதவுகிறது.

நடைப்பயிற்சியில் ஏற்படும் முழுப்பயனைப் பெற வேண்டும் என்றால், தினமும் காலையிலோ அல்லது மாலையிலோ ஒரு குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்க வேண்டும். அன்றாடம் நடக்கும் [illegible] படிப்படியாக உடலின் ஆற்றலுக்கு ஏற்றவாறு அதிகரிக்க வேண்டும். நடைப் பயிற்சி மேற்கொள்ளும்போது நடக்கும் இதயத் துடிப்பின் அளவானது நிமிடத்துக்கு 100க்கு மேல் இருக்க வேண்டும்.

ஒரு மனிதன் ஆரோக்கியமாக இருக்க வேண்டும்




என்றால் அன்றாடம் 10,000 காலடிகள் நடக்க வேண்டும் என இதய மருத்துவர்கள் சொல்கின்றனர். ஆனால் நாம் அதிகபட்சம் 3,000 காலடிகளுக்கு மேல் நடப்பதில்லை. பத்தடிகூட நடக்காமல் இருப்பதைவிட 3,000 காலடிகள் நடப்பது நல்லதுதானே.

நடைப்பயிற்சியின் அவசியத்தை இவ்வளவு விரிவாக எடுத்துச் சொல்லியும் சிலர், நடப்பதற்கு எனக்கு நேரமும், வாய்ப்பும் கிடைக்கவே இல்லை என புலம்புவார்கள். அவர்களுக்கு சில அறிவுரைகள்.

நீங்கள் டி.வி. பார்க்கும் பழக்கம் உள்ளவர் என்றால் டி.வி. சேனல்களை மாற்ற ரிமோட்டைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக எழுந்து சென்று நேரிடையாக மாற்றலாம்.

காய்கறி மார்க்கெட்டுக்கும், பலசரக்குக் கடைக்கும் செல்ல இரண்டு சக்கர வாகனங்களை பயன்படுத்துவதற்குப் பதிலாக நடந்து சென்று பொருட்களை வாங்கலாம்.

உங்கள் அலுவலகம், மூன்றாவது அல்லது நான்காவது மாடியில் இருந்தால் லிஃப்ட்டைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக மாடிப்படிகளில் ஏறிச் செல்லலாம்.

நீங்கள் அலுவலகத்துக்கு பஸ்ஸில் செல்பவராக இருந்தால் அலுவலகத்தில் இருந்து பஸ்ஸில் வீட்டுக்குத் திரும்பி வரும்போது இரண்டு ஸ்டாப்புக்கு முன்னால் இறங்கி நடந்து வாருங்கள்.

நீங்கள் அடிக்கடி கோயிலுக்குச் செல்லும் பழக்கம் உடையவர் என்றால் கோயிலில் பிரகாரங்களை நன்கு சுற்றி வாருங்கள்.

### மெல்லோட்டம்

மெல்லோட்டம் என்பது விரைவான நடைக்கும், வேகமான ஓட்டத்துக்கும் இடைப்பட்ட சீரான தன்மை கொண்ட ஓட்டமாகும். இதை ஆங்கிலத்தில் ஜாக்கிங் **(Jogging)** என்பார்கள். உடலுக்கு ஏற்ற சீரிய உடற்பயிற்சிகளில் இதுவும் ஒன்று. இந்தப்பயிற்சியும் மாரடைப்பைத் தடுக்க உதவியாக இருக்கிறது. மேலை நாடுகளில் உள்ள பெரும்பான்மையான மருத்துவர்கள் தங்களை மாரடைப்பில் இருந்து காத்துக்கொள்ள தினமும் மெல்லோட்டத்தை மேற்கொள்கிறார்கள்.

### மெல்லோட்டத்தின் பயன்கள்

இதயமானது சுருங்கும்போது உடலின் பல பகுதிகளுக்கு செல்லும் ரத்தத்தின் அளவானது சாதாரண நிலையைவிட மெல்லோட்டத்தின்போது அதிகமாகிறது.

இதய ரத்தக் குழாய்களையும், ரத்தக் குழாய்களைச் சுற்றியுள்ள அமைப்புகளையும் வலுவாக்குகிறது.

ரத்தக் குழாய்களின் உள்பகுதிகளில் ஏற்படும் சிதைவு மாற்றங்களைத் தடுக்கிறது.

ரத்தமிகு அழுத்த நிலையைக் குறைக்கத் துணை புரிகிறது.

இதயத் தமனிகளில் ஓடும் ரத்தத்தின் அளவானது அதிகமாவதால், இதயத் தமனிகளில் ரத்தம் உறைவதை தடுத்து மாரடைப்பு ஏற்படாமல் காக்கிறது.

ரத்தத்தில் உள்ள கொலஸ்ட்ராலையும், டிரை கிளிசரைடையும் குறைக்க உதவுவதால், மாரடைப்புக்கான வாய்ப்பு குறைகிறது.

### மெல்லோட்டத்துக்கான விதிமுறைகள்

விதிமுறைகள் என்று சிறப்பாக எதுவும் இல்லை. 15 வயதுக்கு மேற்பட்டவர்கள் மெல்லோட்டத்தில் ஈடுபடலாம். மெல்லோட்டத்தை மேற்கொள்வதற்கு முன் நீங்கள் உங்கள் மருத்துவரைக் கலந்தாலோசித்து உங்கள் இதயத்துடிப்பு, ரத்த அழுத்த அளவு, நாடித் துடிப்பு, உடல் எடை ஆகியவற்றை நன்கு பரிசோதனை செய்து உங்கள் உடலின் தகுதியைக் கணித்துக்கொள்ளுங்கள். அவற்றைப் பொறுத்து மெல்லோட்டத்தில் ஈடுபடலாமா என்பதை முடிவு செய்யுங்கள்.

நம் நாட்டுச் சூழலில், காலையில் 8 மணிக்கு முன்னரும், மாலையில் 5 மணிக்குப் பின்னரும் மெல்லோட்டத்தில் ஈடுபடலாம். அவைதான் இந்த உடற்பயிற்சிக்கான சிறந்த வேளைகள். மாலைப் பொழுதைவிட விடியல் பொழுதுதான் மிகவும் சிறந்தது. ஏனென்றால் காலைப் பொழுதில் வீசும் இளம் தென்றலும், மாசு படியாத நிலையில் இருக்கும் தூய்மையான காற்றும் உடல் நலத்துக்கு நல்லது.

மெல்லோட்டத்தைத் தொடங்குவதற்கு முன் உங்கள் மலக்குடல் மிகவும் தூய்மையாக இருக்க வேண்டும். மலச்சிக்கலால் உங்கள் மெல்லோட்டம் பாதிக்கப்படும். காலைப்பொழுதில் மெல்லோட்டத்தைத் தொடங்குவதற்கு முன், ஒரு டம்ளர் வெதுவெதுப்பான நீரில் சிறிது எலுமிச்சைச் சாறும், தேனும் கலந்து குடிக்கலாம். இதனால் மெல்லோட்டத்தின்போது உடலில் இருந்து வெளியாகும் பலவகையான உப்புகளின் இழப்பையும், நீரின் இழப்பையும் ஈடுசெய்யலாம்.

மெல்லோட்டத்தை இப்போதுதான் தொடங்குகிறீர்கள் என்றால் முதல் முதலாக அரை கிலோ மீற்றர் தூரம் மட்டும் ஓடி நிறுத்திக் கொள்ளுங்கள்.

பின்னர் உங்கள் உடல் அமைப்பு வயது, ஆற்றல் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு சிறிது சிறிதாக ஓடும் தூரத்தை அதிகப்படுத்துங்கள். நடுத்தர வயதை எட்டிய ஆண்களும், பெண்களும் ஒரு நாளைக்கு ஐந்து கிலோ மீற்றர் தூரத்துக்கு மேல் ஓடுவது உடல் நலத்துக்கு உகந்தது அல்ல.

### சைக்கிள் பயிற்சி

இதயத்துக்கு உகந்த, உயிர்வளியைப் பெருக்கும் உடற்பயிற்சிகளில் சிறந்தது சைக்கிள் பயிற்சி. இது, குழந்தைகள் முதல் முதியவர்கள்வரை எல்லா வயதினருக்கும் ஏற்ற சிறந்த எளிமையான உடற்பயிற்சியாகும்.

தேசியப் பூங்காக்களில் அங்கு வரும் மக்கள் பயன்படுத்துவதற்காக சைக்கிள்கள் வைக்கப்பட்டுள்ளன. அங்கு வரும் மக்கள் தங்களுடைய உடல் நலத்தைப் பேணுவதற்காகப் பல மணிநேரம் இயற்கையான சூழலில், திறந்த வெளியில் சைக்கிள் பயிற்சி மேற்கொள்வது வழக்கமாகும்.

உடல் பருமன், ரத்தமிகு அழுத்த நோய், குடல் இறக்கம், மூட்டுச்சிதைவு நோய், வாதக் காய்ச்சல் நோய், முதுகுத் தண்டுவடம் நழுவுதல், கால் பெரு நரம்பு அழற்சி போன்ற நோய்களைக் குணப்படுத்துவதற்கான சிகிச்சையில், சைக்கிள் பயிற்சியையும் ஒரு முக்கியமான அம்சமாக வைத்திருக்கிறார்கள்.

பெரும்பான்மையான மருத்துவமனைகளில் சைக்கிள் பயிற்சியை ஒருவகையான மருத்துவமுறையாகக் கையாள்கிறார்கள். சிலவகையான நோயாளிகளுக்கு அவர்கள் தங்கள் உடல் நலத்தை மீண்டும் பெற சைக்கிள் பயிற்சியைப் பரிந்துரைக்கிறார்கள். மேலும் நீண்டநாள்களாகப் படுக்கையில் இருக்கும் நோயாளிகளின் வலுவிழந்த தசைகள் மீண்டும் உயிர்பெற, சைக்கிள் பயிற்சியை அளிக்கின்றனர்.

பள்ளிகளில் சைக்கிள் பயிற்சியை விளையாட்டுக் கல்வியில் ஒரு பாடமாக வைத்துள்ளனர். தினமும் பள்ளி நேரத்தில் மாணவ, மாணவிகள் சைக்கிள் பயிற்சியை மேற்கொள்ள வேண்டும் என்பதை நடைமுறைப்படுத்தியுள்ளனர். இத்தகைய முயற்சியின் காரணமாக உடல் நலக்குறைவால் பள்ளிக்கு வராமல் இருக்கும் மாணவ மாணவிகளின் எண்ணிக்கை மிகவும் குறைவாகச் செல்கின்றனர்.

அன்றாடம் சிலமணி நேரம் மேற்கொள்ளும் சைக்கிள் பயிற்சியானது, இதயத் தசைகளை நன்கு வலுவாக்குவதோடு அல்லாமல், இதயத் தசைக்குச் செல்லும் ரத்தத்தின் அளவைப் பன்மடங்கு அதிகமாக்குகிறது.





# நீலத்திமிங்கலம்

## *Blue Whale*

உலகிலேயே மிகப்பெரிய விலங்கு எது? ஆம். நீலத் திமிங்கலம் (Blue Whale) தான் உலகிலேயே மிகப் பெரிய விலங்கு. டைனோசர்களை விடப் பெரியவை இந்த திமிங்கலங்கள்.

நீலத் திமிங்கலம் (Blue Whale) கடலில் வாழும் பாலூட்டி (Marine Mammal) வகையைச் சார்ந்தது.

இது 80 முதல் 100 அடி நீளம் வரை இருக்கும்.

இதன் எடை 150 தொன்கள் (அதாவது, 1,50,000 கிலோகிராம்) வரை இருக்கும்.

நீலத் திமிங்கலத்தின் குட்டி பிறக்கும்போதே 2 தொன்கள் (அதாவது, 2 ஆயிரம் கிலோகிராம்) வரை இருக்குமாம்.

இது 80 முதல் 90 ஆண்டுகள் வரை வாழும். இது வரை கண்டறியப்பட்ட நீலத் திமிங்கலத்தின் அதிகபட்ச வயது 110 ஆண்டுகள்.

இது எழுப்பும் ஒலி ஜெட் விமானத்தின் எந்திரத்தின் ஒலியை விட அதிகமாக இருக்கும். அதாவது, ஏறத்தாழ 188 டெசிபிள்கள். ஒரு நீலத் திமிங்கலத்தின் எடை சராசரியாக 30 வளர்ந்த யானைகளின் எடைக்குச் சமமாக இருக்கும். க்ரில் எனப்படும் சிறு இறால் வகை மீன்களை திமிங்கலங்கள் விரும்பி உண்ணும். ஒரு நாளுக்கு ஒரு திமிங்கலம் உண்ணும் உணவின் எடை ஏறத்தாழ 4 தொன்கள் (4,000 கிலோகிராம்) வரை இருக்கும். அதாவது ஒரு யானையின் எடைக்குச் சமமான ஒரு க்ரில் மீன் கூட்டத்தை உண்ணும்.

ஒரு நீலத் திமிங்கலத்தின் நாக்கு ஏறத்தாழ 2.7 தொன்கள் (2,700 கிலோகிராம்) வரை இருக்கும். இது ஒரு வளர்ந்த பெண் யானையின் எடைக்குச் சமம்.

ஒரு திமிங்கலத்தின் எடை, 3,000 மனிதர்களின் எடைக்குச் (சராசரியாக 50 கிலோகிராம் எடையுள்ள மனிதனைப்போல்) சமமாக இருக்கும்.





# பூமியின் துருவ பகுதிகள்மட்டும் ஏன் குளிர்ச்சியாக உள்ளன?



பூமியின் வட மற்றும் தென் துருவப் பகுதிகள் நில நடுக்கோட்டுப் பகுதியை விட மிகவும் குளிர்ச்சியாகவும், பனிப்பகுதியாகவும் காணப்படுவது ஏன் என்பது பற்றி இந்தப் பகுதியில் காண்போம்.

சூரியனின் ஒளிக்கதிர்கள் பூமியின் நிலநடுக்கோட்டுப் பகுதியில் செங்குத்தாக விழுகின்றன. இதனால் இப்பகுதியில் அதிக அளவில் ஒளி விழுகிறது. இது சூரிய வெப்ப ஆற்றலை அதிக அளவில் இப்பகுதிக்குக் கடத்த வழி வகுக்கிறது.

பூமி தன் அச்சைப் பொறுத்து 23.5 கோண அளவில் சாய்ந்து உள்ளது. இதனால், வட மற்றும் தென் துருவப்பகுதிகளின் மீது விழும் சூரியனின் ஒளியளவு குறைவாக உள்ளது. இதன் விளைவாக, இப்பகுதிகளில் குறைவான அளவே வெப்ப ஆற்றல் கடத்தப்படுகிறது. ஆண்டு முழுவதும், இவ்வாறு வெப்பத்தின் அளவு குறைவாக இருப்பதால், துருவப்பகுதிகள் மிகவும் குளிர்ச்சியாகவும், இப்பகுதிகளில் உள்ள கடல் நீர் உறைந்து பனிப்பகுதியாகவும் காணப்படுகிறது

மேலும், துருவப்பகுதிகளில் உள்ள வெண்ணிற பனிப்பாறைகள் சூரிய ஒளியை எதிரொளித்து விடுகின்றன. ஆனால், நிலநடுக்கோட்டுக்கு அருகிலுள்ள நிலப் பகுதியானது சூரிய ஒளியை அப்படியே உள்வாங்கிக் கொள்வதால், இப்பகுதி வெப்பமாக உள்ளது.

பூமியை நெருங்கும் சூரிய ஒளியானது, சாய்வாக உள்ள துருவப்பகுதியை அடையும் தொலைவு, நில நடுக்கோட்டுப் பகுதியை அடையும் தொலைவை விட அதிகமாக இருப்பதால், அதிக அளவு வளிமண்டலத் துகள்களைக் கடந்து வருகிறது. இத்துகள்கள், ஒளிக் கதிர்கள் துருவப்பகுதியை அடையும் முன், அவற்றில் பெரும்பகுதியை சிதறடித்தும், உள்வாங்கியும் கொள்கின்றன. இதனால் துருவப்பகுதியை குறைவான வெப்ப ஆற்றலே சென்றடைகிறது.

# கல்விக்கதிர்

- அகரன் -

# கோப்பையில் உள்ள சூடான தேநீர் சிறிது நேரத்தில் ஆறுவது எப்படி?



ஒரு கோப்பையில் வைத்த சூடான தேநீர் அல்லது வேறு எந்த பொருளும் சிறிது நேரத்தில் ஆறிவிடும் என்பது நாம் அனைவரும் அறிந்த ஒன்று. இது எப்படி நிகழ்கிறது? இதில் பொதிந்துள்ள அறிவியல் உண்மை என்ன?

எந்தவொரு பருப்பொருளும் கண்ணுக்குப் புலப்படாத நுண்ணிய துகள்களால் உருவானது மேலும், ஒரு பருப்பொருளில் உள்ள நுண் துகள்கள் அவற்றுக்கிடையேயுள்ள ஈர்ப்பு விசைகளால் பிணைக்கப்பட்டுள்ளன.

பொதுவாக, அறை வெப்பநிலையில் **(Room Temperature)** உள்ள நீர்மத்தில் உள்ள கண்ணுக்குப் புலப்படாத நுண்துகள்கள் தொடர்ச்சியாக இடம் பெயர்ந்து கொண்டே இருக்கும். இவை நகர்வதற்கான இயக்க ஆற்றலானது, அறை வெப்பநிலையில் உள்ள நீர்மத்தின் வெப்ப ஆற்றலில் இருந்து கிடைக்கிறது.

இப்பொழுது, ஒரு கோப்பையில் சூடான தேநீர் நிரப்பி, ஒரு மேசையின் மீது வைக்கப்பட்டுள்ளது என்று வைத்துக்கொள்வோம்.

தேநீர் நீர்ம நிலையில் இருக்கும் சூடான பருப்பொருள். அதன் வெப்பநிலை அறை வெப்ப நிலையை விட பல மடங்கு அதிகமாக இருக்கும்.

இதனால், அதில் உள்ள நுண் துகள்கள் அதிக அளவு இயக்க ஆற்றலைப் பெற்று வேகமாக இடம் பெயர்ந்து கொண்டே இருக்கும்.

குறிப்பாக, தேநீரின் மேற்பரப்பு வளிமண்டலக் காற்றுடன் நேரடித் தொடர்பில் இருப்பதால், அதன் மேற்பரப்பில் உள்ள நுண் துகள்கள் வெகு எளிதாகக் கிளர்ச்சியடைந்து, ஆவியாகி (ஆவியாதல் / **Evaporation**), காற்றில் கலந்து (விரவல் / **Diffusion**) விடும். இந்த நிகழ்வு ஒரு சிறிய அளவு வெப்ப ஆற்றல் இயக்க ஆற்றலாக மாற்றப்படுவதால் சாத்தியமாகிறது. இதனால், நீர்மத்தின் மேற்பரப்பு கோப்பையிலுள்ள நீர்மத்தின் மற்ற பகுதிகளை விட வெப்பநிலை குறைந்து காணப்படும். அதாவது, மேற்பரப்பு மற்ற பகுதிகளை விடச் சற்று குளிர்ச்சியாக இருக்கும்.

தேநீரின் மேற்பரப்பில் உள்ள நுண் துகள்கள் இடம் பெயர்ந்து காற்றுடன் கலந்து விட்டதால், அதற்கு அடுத்து கீழுள்ள பரப்பில் உள்ள வேகமாக நகரும் ஆற்றல் படைத்த நீர்மத் துகள்கள் மேற்பரப்பை அடைகின்றன. இந்த துகள்கள் மேலே குறிப்பிட்டுள்ளபடி காற்றுடன் கலந்து விடுகின்றன.

மேற்கூறிய நிகழ்வுகள் தொடர்ந்து நிகழ்ந்து கொண்டே இருப்பதால், நீர்மத் துகள்களின் இயக்கத்திற் கும், ஆவியாதல் நிகழ்வுக்கும் தேநீர் உள்ளடக்கியுள்ள வெப்ப ஆற்றல் செலவிடப் படுகிறது. இத னால் கோப்பையிலுள்ள தேநீரின் வெப்பம் படிப்படியாகக் குறைந்து கொண்டே வருகிறது.

மேற்கூறிய காரணங்களால், கோப்பையில் வைக்கப்பட்டுள்ள தேநீர் சிறிது நேரத்தில் ஆறிவிடுகிறது.

மேலும், கோப்பையின், வடிவம் மற்றும் அதன் தன்மையும் தேநீர் ஆறுவதற்குக் காரணமாக அமைகின்றன.

கோப்பை அகலமாக இருந்தால் மேற்கூறிய நிகழ்வுகள் விரைவாக நடைபெறும். ஏனெனில், அகலமான கோப்பையின் பரப்பளவு அதிகமாக இருக்கும். இதனால் அதன் மேற்பரப்பில் அதிக எண்ணிக்கையிலான துகள்கள் ஆவியாகி காற்றுடன் கலக்கும்.

துருப்பிடிக்காத எஃகு **(Stainless Steel)** உலோகத்தால் ஆன கோப்பையில் தேநீர் இருந்தால், கோப்பையின் பக்கங்களின் மூலம் வெப்பம் கடத்தப்படுவதாலும், அதன் வெப்பநிலை குறையும்.

தேநீர் விரைவில் ஆறிவிடாமல் வெகு நேரம் சூடாக இருக்க விரும்பினால், கண்ணாடி அல்லது பீங்கான் கோப்பைகளை நாம் பயன்படுத்தலாம். ஏனெனில், இவற்றின் கடத்து திறன் உலோகங்களின் கடத்து திறனை விடக் குறைவு.

தேநீர் இங்கு உதாரணமாகக் கொடுக்கப்பட்டுள்ளது. மேற்கூறிய விளக்கங்கள் மற்ற நீர்மப் பொருள்களுக்கும் பொருந்தும்.

# ஆசைப் படிகள்

அவள்
அவனின்
சட்டபூர்வமான மனைவி
அவனின்
இஷ்டப்படி இன்னொருத்தியும்
மனைவியாக
இருதரப்பினரினரதும்
பிள்ளைகள்
வாசல் படிகளில்..!

ஆசியக் கிண்ணம்..!

அவர்கள்
அரசியல் அரங்கேறி
அடித்து அழித்த
நாட்டின் கீர்த்தியை
இவர்கள்.....
ஆடுகளமேறி
அடித்துப் பந்தாடி
மீட்டெடுத்து......!

முட்டை விலை..!

இப்பொழுதெல்லாம்
திடீரென
பேட்டுக் கோழிகள்
இறக்கை அடித்து
பலமான
கொக்கரிப்பில்...!

நமது ராஜாங்கம்...!

நாட்டின்
வருமானத்தை அதிகரிக்க
அவசரமான நடவடிக்கை
எடுக்கப்படும்
எடுத்தார்கள்....!
அமைச்சர்கள்
இராஜாங்க அமைச்சர்கள்
நியமனத்தில்
உடனடி அதிகரிப்பு...!

- ஷெல்லிதாசன் -

# நினைவுகளின் ஊர்வலம்


காணாமல் கண்கள்
தெருவெங்கும் தேடும்

கண்டாலோ அதுவே
நோக்காமல் நானும்
அனலிட்ட மனது
அலையெனவே ஆடும்
அருகினிலே வந்தாலே
பனிக்கூழாக கரையும்

தூரத்தில் உன் உருவம்
புள்ளியாய் மறையும்
பின் இருக்கையில் இருதயம்
தாவிக்கொள்ள ஏங்கும்
நீ செல்லும் வழிகள்
இரு விழியும் அறியும்
ஆனாலும் அன்பே
தொடர்ந்திடவா முடியும்?

- தீபதனு -
திருகோணமலை

# கலைக் கதிர்



# சீதையின் காதல்

## இலக்கிய நயம்



விசுவாமித்திரன் முன்னே நடக்க, ராமனும் அவன் தம்பி லட்சுமணனும் பின்னால் வருகிறார்கள். மிதிலை நகர எல்லைக்குள் கால் பதிக்கிறார்கள்.

அந்த ஊர் மதில்கள்மீது கொடிகள் பறக்கின்றன. அவை ராமனை நோக்கிக் கை அசைத்து 'வா, வா' என்று அழைப்பதுபோல் தோன்றுகிறதாம்.

ராமன் ஏன் மிதிலைக்குள் வரவேண்டும்?

காரணம் இருக்கிறது. 'மை அறு மலரின் நீங்கி, யான் செய் மா தவத்தின் வந்து செய்யவள் இருந்தாள்' என்று அந்தக் கொடிகள் சொல்வதாகக் கம்பர் வர்ணிக்கிறார். குற்றமில்லாத தாமரை மலரை விட்டு நீங்கிய திருமகள், எங்கள் நகரம் செய்த தவத்தினால் இங்கே சீதையாக வந்து பிறந்திருக்கிறாள். ஆகவே, ராமா நீ இங்கே வா, அவளுடைய கைத்தலம் பற்றிக் கொள்!

சீதை அப்பேர்ப்பட்ட அழகியா?

பின்னே? 'மதனற்கும் எழுத ஒண்ணாச் சீதை' என்கிறார் கம்பர். அந்த மன்மதனால்கூடச் சீதையின் அழகை ஓவியமாகத் தீட்டமுடியாதாம்.

மன்மதன் யோசித்தான், மற்ற வண்ணங்களெல்லாம் சீதையைப் படமாக வரைய போதாது என்று, அமுதத்தை எடுத்தான், அதில் தூரிகையைத் தோய்த்தான், படம் வரைய நினைத்தான்.

ம்ஹூம், அப்பேர்ப்பட்ட அமுதத்தால்கூட அந்தப் பேரழகைப் பதிவு செய்ய முடியவில்லையாம். மன்மதன் திகைத்துப்போய் நிற்கிறான். 'ஆதரித்து அமுதில் கோல் தோய்த்து அவயம் அமைக்கும் தன்மை யாதெனத் திகைக்கும்!'

இப்படிக் கம்பர் வர்ணித்துக்கொண்டிருக்கும்போதே, ராமரும் லட்சுமணரும் விசுவாமித்திரருடன் மிதிலைக்குள் நுழைந்துவிடுகிறார்கள். பல காட்சிகளைக் கண்டபடி நடக்கிறார்கள்.

அங்கே ஒரு நடன சாலை. அதில் 'ஐயம் நுண் இடையார்', அதாவது இடை இருக்கிறதா, இல்லையா என்று சந்தேகம் வரும்படி நுட்பமான இடுப்பைக் கொண்ட பெண்கள் நடனமாடுகிறார்கள்.

இன்னொருபக்கம், சில பெண்கள் ஊஞ்சலாடிக் கொண்டிருக்கிறார்கள், எப்படி? மாசு உறு பிறவிபோல் வருவது போவது ஆகி', தவறு செய்தவர்கள் மீண்டும் மீண்டும் இந்தப் பூமியில் பிறப்பதைப்போல, அவர்களுடைய ஊஞ்சல் முன்னும் பின்னும் ஆடுகிறதாம். அதைப் பார்த்த ஆண்களின் உள்ளமும் அதோடு சேர்ந்து தடுமாறுகிறதாம்.

வேறொருபக்கம், சில பெண்கள் பாடிக்கொண்டிருக்கிறார்கள், சில பெண்கள் பூப்பறிக்கிறார்கள், பந்தாடுகிறார்கள், குளிக்கிறார்கள். ஆனால் இவர்களில் யாரையும் ராமன் நிமிர்ந்து பார்க்கவில்லை. சமர்த்தாக முனிவரின் பின்னே நடந்துகொண்டிருக்கிறான்.

சிறிது நேரத்தில், அவர்கள் அரண்மனையை நெருங்குகிறார்கள். அங்கே கன்னிமாடத்தில் சீதை நிற்கிறாள். அந்தக் காட்சியைக் கம்பர் இப்படி வர்ணிக்கிறார்:

**பொன்னின் சோதி, போதின் நாற்றம், பொலிவேபோல்**
**தென் உண் தேனின் தீம் சுவை, செம் சொல் கவி இன்பம்,**
**கன்னி மாடத்து உம்பரின் மாடே களி பேடோடு**
**அன்னம் ஆடு முன் துறை கண்டு ஆங்கு அயல் நின்றார்**

தங்கத்தின் பிரகாசம், பூவின் நறுமணம், வண்டுகள் அருந்துகின்ற தேனின் இனிமையான ருசி, சிறந்த சொற்களைத் தேர்ந்தெடுத்து எழுதிய நல்ல கவிதை தரும் இன்பம், இவை எல்லாவற்றையும் ஒன்றாகத் திரட்டியதுபோன்ற ஓர் உருவம், கன்னி மாடத்தில் நிற்கிறது. அங்கே அன்னங்கள் சேர்ந்து விளையாட, அவற்றின் நடுவே சீதை தோன்றுகிறாள்.

சீதையைப் பார்த்த மனிதர்களெல்லாம் 'அடடா, தேவர்களைப்போல நமக்கும் இமைக்காத விழி கிடைத்தால் இவளைப் பார்த்துக்கொண்டே இருக்கலாமே' என்று ஏங்குகிறார்களாம். அந்தத் தேவர்களோ 'நமக்கு இரண்டு கண்கள்தானே இருக்கிறது, சீதையைப் பார்க்க இவை போதாதே, இன்னும் ஏழெட்டுக் கண் கிடைத்தால் நன்றாக இருக்குமே' என்று தவிக்கிறார்களாம். ('இமையா நாட்டம் பெற்றிலம் என்றார், இரு கண்ணால் அமையாது என்றார் வானத்தவர்')

கன்னிமாடத்தில் சீதையின் அருகே பல பெண்கள் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் யாரும் சீதையுடைய அழகுக்கு இணையாகமாட்டார்கள். 'சதகோடி மின் சேவிக்க, மின் அரசு எனும்படி நின்றாள்' என்கிறார் கம்பர். நூறு கோடி மின்னல்கள் சுற்றிலும் வந்து நின்று வணங்கி நிற்க, நடுவில் அவர்களுக்கெல்லாம் தலைவியாக நின்ற 'மின்னல் அரசி'யாம் சீதை!

இன்னும், சீதையின் அழகைக் கண்டு 'குன்றும், சுவரும், திண் கல்லும், புல்லும்' உருகுகின்றன, அவள் அணிந்திருக்கிற நகைகளால் சீதைக்கு அழகு இல்லை, சீதையால்தான் அந்த ஆபரணங்களுக்கு அழகு ('அழகெனும் மணியுமோர் அழகு பெற்றவே'), பெண்களே அவளைக் கண்டு காதல் கொள்கிறார்கள் ('மங்கையர்க்கு இனியது ஓர் மருந்து'). இப்படிக் கம்பர் அடுக்கிக்கொண்டே போகிறார்.

அப்பேர்ப்பட்ட சீதையை, ராமன் பார்க்கிறான், அவளும் அவனைப் பார்க்கிறாள், புகழ் பெற்ற 'அண்ணலும் நோக்கினான், அவளும் நோக்கினாள்' பாடல் இப்படித் தொடங்குகிறது.

# பறை முழக்கம்

பந்தல போட்டு பந்திய வச்சி
பாடுபட்டு வயலை உழுது
மூத்த பிள்ளையின் வாழ்க்கைக் கதவ
மூண்டு முடிச்சில திறந்தான் தகப்பன்

நாத்து நட்டு தண்ணியப் பாய்ச்சி
நாடு சிரிக்க நாயா உழைச்சான்
ஏழக் குடிச ஓடத்தில மெதக்க
எசமான் அடுக்கு மாடியில இருப்பான்

பள்ளிய முடிச்சி பட்டம் வேண்ட
பணமும் இல்ல பஞ்சத் துரையே
படிப்ப நிறுத்தி பொழப்பத் தேடு
படிய அளக்க மடியக் காட்டு

பாமரக் குடியில எத்தன நடப்பு
பட்ட மரத்தில என்ன செழிப்பு
பறையே முழங்கிச் சங்கதி சொல்லு
பயிர வெதச்சவன் பண்பட்டு நடப்பான்

- சம்பூர் சபறாஸ் -

காலைக்கதிர் வார இதழ் Kalaikkathir

# "எனக்கென்று ஒரு அங்கீகாரத்தை பெறுவதற்காக மட்டுமே படைப்புகளைச் செய்து வருகின்றேன்"

நேர்காணல்

## வளர்ந்து வரும் குறுந் திரைப்பட இயக்குநர் நடராசா பிரகாஷ் உடனான நேர்காணல்

**நேர்கண்டவர் - திருமலை தட்சா**



**01) உங்களைப் பற்றிய சிறு அறிமுகம்?**

எனது பெயர் நடராசா பிரகாஷ். நான் முல்லைத் தீவு மாவட்டத்தில் மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவில் இருக்கின்ற பாலிநகர் கிராமத்தைச் சேர்ந்த வன். எனது ஆரம்பக் கல்வியை மு/பாலிநகர் மகா வித்தியாலயத்திலும், உயர் கல்வியை மு/மல்லாவி மத்திய கல்லூரியிலும் கற்றேன். உயர் தரப்பிரிவில் கணித பிரிவைத் தெரிவு செய்திருந்த என்னால் பல் கலைக்கழக பிரவேசத்திற்கு தகுதி பெற முடியாமல் போனது என்னை மிகுந்த மன வேதனை அடையச் செய்தது. கல்வி தான் எல்லாமே என்கிற இந்த சமூகத் தின் மத்தியில் ஒரு கலைஞனாக என் படைப்புக்க ளோடு முன்னேற துடிக்கிறேன்.

**02)சினிமாத்துறையினைஉங்களதுகலைத்துறையாக தேர்ந்தெடுத்தமை குறித்து?**

சிறுவயதிலிருந்தே இந்திய திரைப்படங்கள் பார்ப் பது அதிகம். அதிலும் இயக்குனர் சேரனின் ஆட்டோ கிராப் திரைப்படம் தான் நானும் இயக்குநர் ஆக வேண்டுமென்ற ஆசையை ஏற்படுத்தியது. ஒரு பிரச் சினையை இலகுவாக அனைவரிடமும் கொண்டு போய் சேர்க்க சினிமா துறையினால் முடியும் என்ப தால், எங்கள் சமூகத்தின் பிரச்சினைகளையும் சினிமா மூலம் வெளி உலகிற்கு காட்சிப்படுத்தி சொல்ல வேண் டும் என்ற நோக்கத்திலேயே இத்துறையை தேர்ந் தெடுத்தேன்.

**03) சினிமாத் துறையில் உங்களுக்கான முதல் வாய்ப்பு கிடைத்தது குறித்து?**

எனக்கு முதல் வாய்ப்பு என்பது எங்கும் கிடைக்க வில்லை. நானாகவே வாய்ப்பை உருவாக்கிக் கொண் டேன். போருக்கு பின்னரான காலப்பகுதியில் எங்கள் பகுதியில் இளைஞர்கள், யுவதிகள் எதிர் நோக்கிய பிரச்சினைகளை மையமாகக் கொண்டு 2017ஆம் ஆண்டு நண்பன் துசாபனின் கைக்கமராவின் உதவி யுடன் எனது முதல் குறுந்திரைப்படத்தை இயக்கியி ருந்தேன்.

**04) இதுவரையில் உருவாக்கிய குறுந்திரைப் படங்கள் குறித்து?**

எனது முதல் படைப்பு இங்க வேல இல்ல இது வன்னி பிரதேசத்திலிருந்து கொழும்புக்கு வேலை தேடிச்செல்லும் இளைஞர் யுவதிகள் அங்கு போலியான வேலை வழங்குனர்களால் ஏமாற்றப்படுவது குறித்தது. குறிப்பாக யுவதிகள் ஏமாற்றப்படுவதனை அடிப்படை யாகக் கொண்டு எடுக்கப்பட்டது.

இரண்டாவதாக உயிர் மூச்சு இது சமூகவலைத் தளங்களில் அறிமுகமற்ற ஒரு நபருடன் உரையாடும் ஒரு பெண்ணும், அறிமுகமற்ற ஒரு வெளிநாட்டவரை திருமணம் செய்யும் இன்னொரு பெண்ணும் எதிர் நோக்கும் பிரச்சினைகளை அடிப்படையாக வைத்துக் கொண்டு நண்பன் பிரவீனின் ஒளிப்பதிவில் உரு வாக்கப்பட்ட படைப்பாகும்.

மூன்றாவதாக உதிரும் நொடிகள் இது பல்கலைக் கழகத்திற்கு தெரிவாகும் மாணவிகள், சிரேஷ்ட மாண வர்களால் தொலைபேசி மூலம் ஆபாச பகிடிவதை களுக்கு உட்படுதல் தொடர்பாக நண்பன் சதுவின் ஒளிப்பதிவில் 2021ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட படைப்பாகும்.

என்னுடைய நான்காவது குறுந்திரைப்படம் வன வேட்டை இது ஒரு பல்கலைக்கழக பேராசிரியர் தன் னுடைய மகளின் சாவிற்கு காரணமானவர்களை பழி வாங்குவது சம்மந்தமானது. தற்போது ஒரு முழு நீளத் திரைப்படமும் செய்து வருகிறேன்.

**05) உங்களது குறுந்திரைப்படங்கள் மூலமாக சமூகத்திற்கு தேவையான விடயங்களை கொடுக்க முடிகின்றதா?**

தற்போது சமூகம் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தான் படமாக்கி வருகின்றேன். ஓரளவு எனது கருத்துக் கள் சென்றடைகின்றன என்று நம்புகின்றேன். மேலும் ஒரு படைப்பு மக்களை சென்றடைவது ஊட கங்களின் கைகளில்தான் உள்ளது.

**06) ஒவ்வொரு குறுந் திரைப்படத்தினையும் ஆரம் பித்து நிறைவு செய்யும் வரையில் எவ்வாறான சவால் களுக்கு முகங்கொடுத்து வருகின்றீர்கள்?**

ஒரு குறுந்திரைப்படத்தை ஆரம்பித்த போது அனு மதி சம்மந்தமாக ஒரு பிரதேச செயலகத்திற்கு கதைக்க சென்றிருந்தபோது அந்த பிரதேசத்தின் கலை கலாசார உத்தியோகத்தராலேயே நான் அவமானப்படுத்தப் பட்டு திருப்பியனுப்பப்பட்டிருந்தேன். இப்படி திரைப் படங்கள் சார்ந்த அனுமதியை பெற்றுக் கொள்வது சவாலானதாகவே உள்ளது. மேலும் அதிகமான கலை ஞர்களை ஒரே நேரத்தில் ஒன்றாக ஒருங்கிணைப் பதும் மிகச் சவாலாகவுள்ளது . அதே போன்று நல்ல கதையை வைத்திருந்தாலும் எங்களிடம் சொந்தமாக கமரா இல்லாததனால் ஒவ்வொரு படப்பிடிப்பு கலையை கங்களையும் நாடவேண்டியுள்ளது. அவர்களும் திருமண ஒளிப்பதிவு நிகழ்வுகளுக்கு கிடைக்கும் பெரிய அளவு தொகையினை எங்களிடம் எதிர்பார்ப்பதால் அது மிகப் பெரிய சவாலாகவுள்ளது.

**07) இத் துறை மூலமாக உங்களுக்கு போதியள விலான வருமானம் கிடைக்கப் பெறுகின்றதா?**

நிச்சயமாக இல்லை. வளர்ந்து வரும் எமது சினி மாவில் எனது திறமையை வெளிக் கொணர்வத கும் எனக்கென்று ஒரு அங்கீகாரத்தை பெறுவதற் காக மட்டுமே படைப்புகளைச் செய்து வருகின்றேன்.

**08) தற்கால சமூகத்தில் இலங்கை சினிமாத் துறைக்கான வரவேற்பு எவ்வாறு உள்ளது?**

தற்போது ஓரளவுக்கேனும் எங்களுடைய படைப்புக் களையும் மக்கள் இரசிக்கத் தொடங்கியிருக்கிறார்கள். இன்னும் அதிக அளவானவர்கள் ஆதரவை வழங்கி னால் இன்னும் அதிகமான படைப்புக்கள் உருவாவ தற்கு வாய்ப்பாக அமையும்.

**09) உங்களது முல்லைத்தீவு மாவட்டத்தில் குறுந் திரைப்படங்கள் மீதான பார்வை எவ்வாறு காணப்படு கிறது?**

போருக்கு பின்னரான காலப்பகுதியில் முல்லைத் தீவு மாவட்டத்தில் குறுந்திரைப்படங்களுக்கான ஆதரவு அதிகமாகவே உள்ளது. சினிமாத்துறையில் தங்களா லும் சாதிக்க முடியும் என எமது மாவட்டத்தைச் சேர்ந்த பல இளைஞர்கள் சிந்திக்க தொடங்கியிருக்கிறார் கள்.

**10) சினிமாத் துறையில் உங்களுடன் இணைந்து பணியாற்றுபவர்கள் பற்றி?**

எனது ஒவ்வொரு குறுந்திரைப்படங்களின் உருவாக் கத்திலும் எனது நண்பர்கள் எப்போதும் என்னோடு நிற்கிறார்கள். நண்பர்களான விதுசன், ஜக்சன், கமல் அண்ணா போன்றவர்கள் ஒரு குழுவாக இயங்கி எனது பணிகளை இலகுவாக்குகிறார்கள். புதுமுக கலைஞர் களும் தற்போது ஆதரவு வழங்கிக் கொண்டிருக்கிறார் கள். வெளிமாவட்டத்திலிருந்து அஜய் அண்ணா, இதயராஜ் அண்ணா, நவம் அண்ணா போன்றவர்க ளும் என்னோடு இணைந்து பணியாற்றியுள்ளனர். மேலும் வெளிநாட்டைச் சேர்ந்த அருள் அண்ணா அவர்களும் என்னுடைய திரைப்படம் ஒன்றில் இணைந்து பணியாற்றியுள்ளார்.



**11) எதிர்காலத்தில் வரவிருக்கும் படைப்புகள் குறித்து?**

தற்போது ஒரு முழுநீளத் திரைப்படம் ஒன்றை இயக்கி வருகிறேன். அத்தோடு வன வேட்டை குறுந்தி ரைப்படத்தின் இரண்டாம் பாகத்தினையும் விரைவில் எடுக்கவுள்ளேன்.

**12) சினிமாத்துறையில் உங்களுக்கான இலக்கு எதுவாகவுள்ளது?**

இந்தியாவில் ஒரு பெரிய நடிகரை வைத்து, எமது இலங்கையைச் சேர்ந்த நடிகர்களையும் உள்வாங்கி ஒரு திரைப்படம் இயக்க வேண்டும் என்பதுதான் எனது இலக்கு.

**13) நிறைவாக, சாதிக்க நினைக்கும் இளைஞர் களுக்கு நீங்கள் கூற விரும்புவது?**

இங்கு எமக்கான வாய்ப்புகள் எம்மை தேடி வருவ தில்லை. நாங்கள் தான் அவற்றை உருவாக்கிக் கொண்டு எமது திறமைகளை உலகிற்கு அடையாளம் காட்டுவதன் மூலமாக வாய்ப்புகள் எம்மை தேடிவரச் செய்ய வேண்டும்.

# மறைந்தும் மறையாத மகாராணியார்



- நியூசிலாந்து சிற்சபேசன் -

> முடியாட்சிமுறை அவசியமற் றது என்னும் அபிப்பிராயம் வலுவடைகின்றது. முடி யாட்சிக்கு எதிரான குரல்கள் அடிக்கடி மட்டுமல்ல, உரத்தும் கேட்கின்றன. கருத்துக் கணிப்புக்களில் முடி யாட்சிக்கு எதிரான குரலின் வீரியம் தென்படுகின்றது. மகாராணியாரின் மறைவு திருப்புமுனை ஆகலாம்.

வரலாற்றிலே தன்னுடைய முத்திரையைக் காத்திரமாகப் பதித்துவிட்ட எலிசபெத் மகாராணியின் மறைவு, பரந்துபட்ட மக்களிடையே சோகத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் என்பதை வாழ்ந்து காட்டியவர். தன்னுடைய வாழ்வின் பெரும்பகுதியை மகாராணியாகவே கழித்தவர். தனது 25வயதில் தந்தையார் மறைந்தபோது, வம்ச உரித்தின் அடிப்படையில் மகாராணியாகியவர். பொதுவாழ்க்கைக்குத் தன்னை அர்பணித்துக் கொண்டவர். அதனால் தனிப்பட்ட சுதந்திரங்களை இழந்தவர். முடியாட்சியின் மகிமையைப் பேணிப்பாதுகாத்தவர். உலகிலேயே அதிககாலம் மகாராணியாக வலம் வந்த பெண் என்ற பெருமைக்குச் சொந்தக்காரர். மகாராணியாகப் பட்டம் சூட்டிக்கொண்டதன் வெள்ளிவிழா,பொன்விழா, வைரவிழா என எழுபது வருடங்களைக் கடந்தவர்.

அவர் மகாராணியாகப் பட்டம் சூட்டிக் கொண்ட பின்னர் உலகச்சூழல் வேகமாக மாற்றமடைய ஆரம்பித்தது. அத்தகையதொரு சூழலை, அதனுடைய போக்கிலேயே ஏற்றுக்கொண்டவர். முப்பது வரையான தேசங்களுக்கு மகாராணியாக வலம்வந்தவர். பிரித்தானிய சாம்ராஜ்யம் சுருங்க ஆரம்பித்தபோது, அவருடைய ராஜ்ஜியத்தின் நிலப்பரப்புக்களும் சுருங்கின. ஈற்றில், அவர் மறையும்போது சுமார் பதினைந்து வரையான நிலப்பகுதிகளுக்கே மகாராணியாகத் திகழ்ந்தவர். ஆனாலும், அவருடைய மிடுக்கும் மாண்பும் குறையவில்லை. மாறாக, நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக அதிகரித்தே வந்தன. மண்ணவரும் விண்ணவரும் போற்றுகின்ற பெண்ணுக்கு அடையாளமானார்.

ஐக்கிய இராச்சியத்தின் மகாராணியாகப் பட்டம் சூட்டிக்கொண்டபோது, கனடா – ஆஸ்திரேலியா – நியூசிலாந்து போன்ற நிலப்பரப்புக்களும் அவரை மகாராணியாக்கி முடியாட்சி மரபை வரித்துக்கொண்டன.

நியூசிலாந்தின் பூர்வகுடிகளான மவோரி தலைவர்களுடன் விக்டோரியா மகாராணி 1840ல் ஏற்படுத்திக்கொண்ட உடன்படிக்கையின் அடிப்படையிலேயே நியூசிலாந்தில் முடியாட்சி உருவாகியது.

நியூசிலாந்து சுமார் ஆயிரம் ஆண்டு வரலாற்றைக் கொண்டதாகும். மவோரி மக்களே முதன்முதலில் குடியேறியோராகும். அதன்பின்னர், சுமார் முந்நூறு ஆண்டுகள் கழித்தே ஐரோப்பியரின் வருகை ஆரம்பமாகியது. தாஸ்மன் என்னும் டச்சுக்காரரே முன்னோ



டியாகும். நியூசிலாந்தின் இரண்டு தீவுகளையும் கடல் வழியாகச் சுற்றிவந்த பெருமை ஜேம்ஸ் கூக் என்னும் பிரித்தானியருடையதாகும். அவரே முதன்முதலில், தேசத்தின் முழுமையான பரிமாணங்களைப் பெருமளவிலே அறிந்துகொண்டவராகச் சொல்லப்படுகின்றது. அதன்பின்னரே ஐரோப்பியரின் வருகை கணிசமாக அதிகரித்ததாகக் கருதப்படுகின்றது.

பிரித்தானிய முடியாட்சியை ஏற்றுக்கொண்ட பின்னரே மவோரி மற்றும் ஐரோப்பிய குடியேற்றவாசிகளிடையே முரண்பாடுகள் ஆரம்பமாகின. ஐரோப்பியர் நிலங்களைக் கையகப்படுத்த ஆரம்பித்தனர். அதனால், பூர்வகுடிகளான மவோரி மக்கள் கிளர்ந்தெழுந்தனர். அதுவே நிலத்துக்கான யுத்தமாகியது. மூன்று சகாப்தங்கள் வரை நீடித்தது. அதன்பின்னர், உடன்பாடுகள் எட்டப்பட்டன. ஆனால், பூர்வீகமக்களுடைய நில உரித்து தொடர்பான சர்ச்சைகள் இன்றும்கூட நீதிமன்றங்களிலே தொடருகின்றன. நில உரித்து தொடர்பான சர்சைகளுக்கு, நியாயமான தீர்வை நியூசிலாந்து அக்கறையுடன் தேடுகின்றது. அன்றொரு காலத்திலே, மவோரி மக்களுக்கு அநீதி இழைக்கப்பட்டமையை நியூசிலாந்து ஏற்றுக்கொண்டுள்ளது. அதனாலேயே பரிகாரம் தேடுவதோடு நின்றுவிடாமல், எதிர்காலத்தில் அப்படியான சூழ்நிலை ஏற்படாதவகையில் சட்ட ஏற்பாடுகளையும் அமைத்துக்கொண்டிருக்கின்றது.

இத்தகைய கரடுமுரடான பாதையிலும் கூட, பிரித்தானிய முடியாட்சி மரபை நியூசிலாந்து பேணிப் பாதுகாத்துக்கொண்டது. மகாராணியின் தகப்பனாரான ஆறாம் ஜோர்ஜ் மன்னர் காலமாகியபோது, இளவரசி எலிசபெத் நியூசிலாந்துக்கும் மகாராணியானார்.

பங்குமுடியாட்சி என்னும் கோட்பாட்டின் அடிப்படையில், பிரித்தானியா மகாராணி, பிரித்தானியாவுக்கு வெளியேயுள்ள வேறு நிலப்பரப்புகளுக்கும் மகாராணியாகின்றார். விரிவாகச் சொல்வதானால், பிரித்தானியாவின் மகாராணியே, நியூசிலாந்தின் மகாராணியாகப் பொறுப்பைக் கொண்டிருப்பதனால் இரண்டும் ஒரே ஆளுகைக்கு உட்பட்ட தேசம் என்னும் பொருளல்ல



என்பதாகும்.

1840ல் பிரித்தானியாவின் காலனியாகிய நியூசிலாந்து, 1901ல் சுயாட்சி கொண்ட காலனியாக மாறியது. 1907ல் டொமினியன் அந்தஸ்து கிடைத்தது. 1947ல் சுதந்திர நாடாகியது. இவ்வாறான மாற்றங்களை உள்வாங்கி தனித்துவமான தேசமாக மலர்ந்தது. இருந்தபோதிலும், பிரித்தானிய முடியாட்சியுடனான பிணைப்பை நியூசிலாந்து முறித்துக் கொள்ளவில்லை. மகாராணியின் பிரதிநிதியாக கவர்னர் ஜெனரல் காணப்படுகின்றார். கவர்னர் ஜெனரலை மகாராணியே நியமிக்கின்றார். அதற்கான பரிந்துரையை நியூசிலாந்து பிரதமரே மேற்கொள்கின்றார்.

நியூசிலாந்து கொண்டிருப்பது அரசியல்யாப்பு சார்ந்த முடியாட்சியாகும். அதன்பொருள்:- மக்களால் தேர்தலொன்றிலே தெரிவு செய்யப்படுகின்ற அரசே ஆட்சியதிகாரத்தைக் கொண்டிருக்கும் என்பதாகும். அந்தவகையிலே



முடியாட்சி என்பது மரபின் அடையாளமாகவே போற்றப்படுகின்றது. முடியாட்சியின் பெயரிலேயே ஆட்சி நடைபெறுகின்றது. ஆண்டு தோறும் வழங்கப்படுகின்ற தேசத்தின் உயரிய விருதுகள் மகாராணியின் பெயரிலேயே (இனிமேல் அரசரின் பெயரில்) வழங்கப்படுகின்றன. நாணயங்களிலும் முடியாட்சியின் பிம்பங்கள் இடம் பெறுகின்றன.

மகாராணி எலிசபெத்தும் எடின்பரோ கோமகனும், முதலாவது நியூசிலாந்து விஜயத்தை 1953 கோடை காலத்திலேயே மேற்கொண்டனர். அதுவே மகாராணிப் பட்டம் சூட்டிக்கொண்ட பின்னரான முதலாவது விஜயமாகியது. அந்த விஜயத்தின்போது தேசத்திலுள்ள ஐம்பது வரையான இடங்களுக்குச் சென்றதோடு, நூற்றுக்கு மேற்பட்ட வைபவங்களிலும் மகாராணியார் கலந்துகொண்டிருந்தார். 2002ம் ஆண்டிலேயே கடைசியாக நியூசிலாந்துக்கு விஜயம் செய்திருந்தார்.

நியூசிலாந்து மக்கள் மகாராணியார் குறித்த கனிவான பார்வையைக் கொண்டிருக்கின்றனர். அதே வேளையில், முடியாட்சிமுறை குறித்த கேள்விகளையும் கொண்டுள்ளனர். முடியாட்சிமுறை அவசியமற்றது என்னும் அபிப்பிராயம் வலுவடைகின்றது. முடியாட்சிக்கு எதிரான குரல்கள் அடிக்கடி மட்டுமல்ல, உரத்தும் கேட்கின்றன. கருத்துக் கணிப்புக்களில் முடியாட்சிக்கு எதிரான குரலின் வீரியம் தென்படுகின்றது. மகாராணியாரின் மறைவு திருப்புமுனையாகலாம். எது எப்படியாகிலும், மகாராணி எலிசபெத் நியூசிலாந்து மக்களின் மனங்களில் நீங்காத இடத்தைப் பெற்றிருக்கின்றார். அந்தவகையிலே, மறைந்தும் மறையாத மகாராணியாகியுள்ளார்.

# தமிழ் கூறும் நல்லுலகு என்றுமே மறக்க முடியாத ஒரு வழிகாட்டி தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள்

## இன்றைய இளம் சமுதாயத்தினருக்கு அவர் பணியை உணர்த்துவோம் – 02

- கலாநிதி ரூபன் மரியாம்பிள்ளை அடிகள் -
(ஊடக வருகை விரிவுரையாளர் - இலங்கை திறந்த பல்கலைக்கழகம்; ஓய்வு நிலை ஊடக வருகை விரிவுரையாளர் - யாழ் பல்கலைக்கழகம் இயக்குநர் - பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர்)

பத்திரிகைதுறையை இலங்கையில் அறிமுகப்படுத்தியவர்கள் கிறிஸ்தவ மிசனரிமார். இவர்களின் நேரடி நோக்கம் பத்திரிகைத் துறையை இலங்கையில் அறிமுகப்படுத்த வேண்டும் - அதனை வளர்க்க வேண்டும் என்ற ஆவல் மிகுதியல்ல; மாறாக பத்திரிகைத்துறையை தமது சமய பரப்பற் பணிக்குப் பயன்படுத்த வேண்டும், அதன் வழி முழுவெற்றி பெறவேண்டும் என்பதாகும். தனிநாயகம் அடிகளாரின் தமிழுப்பணியும் அவ்வாறே நோக்கப்படவேண்டும்.

**தனிநாயகம் அடிகளார் ஆற்றிய பத்திரிகைப்பணி**

தனிநாயகம் அடிகளார் தாமே ஆசிரியாரக இருந்து ஆற்றிய பத்திரிகைப் பணியையும் மற்றைய இதழ்களில் அவர் ஆற்றிய பத்திரிகைப் பணியையும் இங்கு நோக்குவோம்.

1923 - 1930 காலப்பகுதியில் புனித பத்திரிசியார் கல்லூரியில் கல்விகற்ற 15ஆவது வயதிலேயே பொட்டில் சன் சையின் - என்ற ஆங்கில இதழின் ஆசிரியராக இவர் தம் பத்திரிகைப்பணியை ஆரம்பித்தார் என்பது



வியப்பிற்குரிய தகவலாகும். 1928ஆம் ஆண்டு **My Favourite Hero in History Nepoleon** என்னும் தம் முதல் ஆக்கத்தை பொட்டில் சன் சையின் என்ற இதழில் அவர் எழுதியள்ளார். தனிநாயகம் அடிகளாரின் இறுதிக்கட்டுரை 5 ஆவது உலகத்தமிழ் மகாநாட்டு மலரில் 1981 ஆம் ஆண்டு 'சங்க இலக்கியத்தில் விரிவாகும் ஆளுமையின் பண்பு' என்னும் தலைபில் இவரது இறப்புக்குப் பின்னர் வெளியாகியுள்ளது.

பொட்டில் சன் சையின் - **Bottled Sun shine** தமிழ் கல்சர் - **Tamil Culture** ஜேணல் ஒவ்தமிழ் ஸ்டடீஸ் - **Journal of Tamil studies** முதலியவை தனிநாயகம் அடிகள் ஆசிரியராக இருந்து பணியாற்றியுள்ள ஆங்கில இதழ்களாகும்.

இவற்றோடு கூட சிறுமலர் - தமிழ் ஒளி ஆகிய தமிழ் வெளியீடுகளிலும் இவர் ஆசிரியர்ப்பணி புரிந்துள்ளார். இவற்றைவிட ஞானதூதன் - கத்தோலிக்கசேவை - சத்தியவேத பாதுகாவலன் - தமிழ்ஓசை - இளங்கதிர் - சமயசஞ்சரி - கலைப்பூங்கா - தமிழ்நேசன் - ஈழநாடு - வீரகேசரி போன்ற இதழ்களிலும் எழுதியுள்ளார். மேலும் இவருடைய படைப்புக்கள் மற்றும் நேர்காணல்கள் பொது இதழ்களிலும், சமய இதழ்களிலும், ஆய்வு இதழ்களிலும் வெளிநாட்டு இதழ்கள் - ஆண்டு மலர்கள் - நினைவு மலர்கள் - சிறப்பு மலர்கள் மற்றும் மகாநாட்டு மலர்களிலும் வெளிவந்துள்ளன்.

தனிநாயகம் அடிகளார் ஏறக்குறைய 15 தமிழ் இதழ்களிலும் 25 ஆங்கில இதழ்களிலும் ஒரு மலாய் இதழிலும் எழுதியுள்ளார்.

பல கருத்தரங்க ஆய்வு மலர்களின் பதிப்பாசிரியராக இருந்துள்ளார். சிங்கள, தமிழ்ப் பண்பாடுகளைப் பற்றிய ஆய்வு இதழ் ஒன்றைத் தொடங்கவேண்டுமெனத் திட்டமிட்டிருந்துள்ளார் என 'தனிநாயக அடிகள்' என்ற நூலில் அமுதனடிகள் தெரிவிக்கிறார்.

இவருடைய எழுத்துப்பணி முழுவதும் கல்வி - சமயம் - ஆய்வு - தமிழ் என்ற பரப்புக்களைக் கொண்ட இதழ்களையே சுற்றிவட்டமிட்டுள்ளது என்பதோடு இவ




கல்வி - சமயம் - ஆய்வு - தமிழ் என்பவற்றைப்பற்றியே அமைந்திருந்தன.

தூத்துக்குடி மறைமாட்டத்தில் வடக்கன் குளம் புனித திரேசாள் பள்ளியில் ஆசிரியப்பணி புரிந்த 1940 - 1945 ஆண்டுகாலப்பகுதியில் புனித திரேசம்மாளை பற்றிய சிறு மலர் என்ற இதழை வெளியிட்டு அதன் ஆசிரியராக பணிபுரிந்துள்ளார். இங்கு இவரிடம் கல்வி பயின்ற எம்.ஜி.வென்சஸ்லோஸ் என்பவர் பிற்காலத்தில் வீரகேசரி என்ற இதழை நடத்தியவர் என்பது அரிய தகவலாகும். தனிநாயகம் அடிகளார் தம் இதழியற் பணி வழி பத்திரிகை நிர்வாகியையும் உருவாக்கியுள்ளார் என்பது இங்கு தெரியவருகிறது.

1941ஆம் ஆண்டு மதுரை மறைமாவட்டத்தில் தொடங்கப்பட்ட மாதமிருமுறை சமய இதழான கத்தோலிக்க சேவை என்ற இதழில் தனிநாயகம் அடிகளார் எழுத்துப்பணி புரிந்துள்ளார். 1928ஆம் ஆண்டு தூத்துக்குடி மறைமாவட்டத்தில் தொடங்கப்பட்ட மாதாந்தசமய இதழான ஞானதூதன் என்ற இதழில் தனிநாயகம் அடிகளார் தாம் தூத்துக்குடியில் வாழ்ந்த காலமான 1942 - 1952 காலப் பகுதியில் எழுத்துப்பணி புரிந்தார் என இலங்கை மட்டக்களப்பு மறைமாவட்டத்தைச் சேர்ந்த டாக்டர் வே. அந்தனி யோண் அழகரசன் அடிகளார் தனிநாயகம் அடிகளார் வாழ்வும் பணியும் என்னும் நூலில் தெரிவிக்கிறார்.

மலேசியப் பல்கலைக்கழகத்தில் 1961 - 1969 ஆண்டு காலப்பகுதியில் இந்திய மொழிகள் துறையின் தலைவராகத் தனிநாயகம் அடிகளார் பணியாற்றிபோது தமிழ்ஒளி என்ற இதழை வெளியிட்டுள்ளார். மலேசியப் பல்கலைக்கழகத்தின் இந்திய மொழித்துறையின் தமிழ்ப் பேரவை சார்பாக 1960இல் தமிழ் ஒளி வெளியிடப்பட்டது. இத்துறைத் தலைவராக முத்து இராசாக் கண்ணனார் 1960இல் இருந்தபோது இவ்விதழ் ஆரம்பிக்கப்பட்டது. தனிநாயகம் அடிகளார் மலேசியப் பல்கலைக்கழகத்தில் இந்திய மொழிகள் துறையின் தலைவராகப் பணியேற்றபோது இரண்டாவது இதழைத் தம் வாழ்த்துரையுடன் வெளியிட்டுள்ளார். தொடர்ந்தும் வெளிவந்த இதழ்களில் தமிழ்ப் பேரவை மாணவர்களின் நிகழ்ச்சிகளைப் பாராட்டி வாழ்த்துரைகள் எழுதியுள்ளார்.

**அன்று சத்தியவேத பாதுகாவலன் இன்று பாதுகாவலன்**

யாழ்ப்பாண மறைமாவட்டத்திலிருந்து நூற்றாண்டுகளைத் தாண்டி அன்று சத்தியவேத பாதுகாவலன் என்றும் இன்று பாதுகாவலன் என்றும் வெளிவந்து கொண்டிருக்கும் சமயப்பத்திரிகையில் 1949 - 1950 - 1951 - 1954 ஆண்டு காலப்பகுதியில் இவரின் ஆக்கங்கள் வெளிவந்ததுள்ளன. இவை சமயம் பற்றியவை அல்லாமல் தமிழ் சார்ந்தவையாகவே வெளிவந்துள்ளன.

இவற்றில் பல கட்டுரைகள் தொடர்கட்டுரைகளாகவே இருக்கின்றன. சங்க இலக்கியத்தின் சிறப்பியல்பு - பிறமொழிக்கலப்பால் ஒரு மொழி சிதையவே செய்யும் - தமிழில் உரையாடுகையில் தனித்தமிழ் மொழியைக்கையாள வேண்டும் - போன்ற தமிழ்க்கட்டுரைகளையும் **In Xaviers Footsteps** போன்ற அவரின் பயணக்கட்டுரைகளையும் இங்கு காணலாம். இவற்றைவிட தமிழ்த்தூது - தமிழின் வளர்ச்சி - கீழ்த்திசை நாடுகளில் அச்சுக்கண்ட முதல் நூல்கள் தமிழ் நூல்களே போன்ற கட்டுரைகளையும் காணலாம். பன்னிரண்டாம் பத்திநாதர் - அர்ச் அகுஸ்தீன் புகழ் உரைநூல் போன்ற சமயம் சார் கட்டுரைகளும் இங்குள்ளன. இவை தனிநாயகம் அடிகள் எழு

திய முழுக்கட்டுரைகளின் தொகுப்பல்ல என்பது இங்கு குறிப்பிடப்படவேண்டிய விடயமாகும். இவை தனிநாயகம் அடிகளாரின் பத்திரிகைப்பணி தமிழை வளர்க்கவே ஆற்றப்பட்டன என்பதை உறுதி செய்கிறது.

தமிழ் ஓசை - இளங்கதிர் - சமூக மஞ்சரி போன்ற இதழ்கள் பற்றிய முழுமையான விவரங்களைப்பெற முடியவில்லை - ஆனால் இவ்விதழ்களில் இவர் முறையே எழுதிய மலரும் மாலையும் (1957) ஒற்றை அமெரிக்கா (1959) முதிந்தோர் கல்வி விரிவு (1960) என்பன முக்கியமானவை என டாக்டர் பா.இறையரசன் தெரிவிக்கிறார்.

இலங்கை இலக்கியக் கழகத்தால் வெளியிடப்பட்ட அரையாண்டு இதழான கலைப் பூங்கா இதழில் திருக்குறளும் கிரேக்க ஒழுக்க இயலும் என்ற கட்டுரையை தனிநாயகம் அடிகள் எழுதியுள்ளார். இவ்விதழின் தலைப்பு தமிழ் கிரேக்க அறக்கொடைகள் ஒப்பாய்வு என இருந்ததாக டாக்டர் வே. அந்தனி யோன் அழகரசன் அடிகளார் தெரிவிக்கிறார்.

தமிழ் நேசன் என்ற மலேசிய நாளிதழ் இங்கு சிறப்பு முக்கியத்துவம் பெறும் பத்திரிகையாகும். 1966 ஆம் ஆண்டு முதல் உலகத்தமிழ் மகாநாட்டுக்கு இவ்விதழ் பெருந்துணை புரிந்துள்ளது என்பதோடு பெருந் தொகைப் பணத்தையும் மகாநாட்டு நிதியாக வழங்கியுள்ளது.

தனிநாயகம் அடிகளின் படைப்புக்கள் அவ்வப்போது இவ்விதழில் வெளிவந்தள்ளது. மலேசியா தமிழ் எழுத்




தாளர் சங்கத்தில் - மலேசியாவில் தமிழ் எழுத்தாளரும் அவர்களின் பணியும் - என்ற தலைப்பில் தனிநாயகம் அடிகள் ஆற்றிய உரை 1963ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டுள்ளது. உலகத்தமிழ் மகாநாடு பற்றி தமிழ்த் துறைகளின் உலகக்கருத்தவை என்னும் தலைப்பில் தனிநாயகம் அடிகளின் கட்டுரை 1966 கருத்தரங்குச் சிறப்பு மலரில் வெளிவந்துள்ளது.

1959ஆம் ஆண்டுமுதல் யாழ்ப்பாணத்தில் தனித் தமிழ்ப்பத்திரிகையாக வெளிவந்து 90களில் இல்லா மற்போன ஈழநாடு பத்திரிகையில் 1971இல் தமிழ் மொழியின் வேர் இயல் - **Tamil Etymology** எனும்




தலைப்பில் தனிநாயகம் அடிகளின் கட்டுரை வெளிவந்துள்ளது.

கொழும்பிலிருந்து இன்றும் வெளிவந்துகொண்டிருக்கும் வீரகேசரிப் பத்திரிகையில் 'வீரமாமுனிவர் தமிழராய்ச்சிக்குப் பங்களிப்புச் செய்த ஐரோப்பியரில் தலைமகன்' என்ற கட்டுரை தனிநாயகம் அடிகளின் இறப்பின் பின்னர் 1980 இல் வெளிவந்துள்ளது. 1958 இல் கல்கி தீபாவளி மலரில் தமிழ்ச்செல்வங்கள் என்னும் கட்டுரை வெளியாகியுள்ளது.

(தொடரும்)

காலைக்கதிர் Kalaikkathir

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.



# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## ஜனாதிபதி பிரேமதாஸாவின் உரை



- செல்லத்துரை ரவீந்திரன் -

**அங்கம் - 126**

ஜனாதிபதியாக பிரேமதாஸா நாட்டு மக்களுக்கு தலதா மாளிகையில் இருந்து ஆற்றிய உரையில் ஓர் உள்நாட்டுப் பிரச்சினையில் அதனை தீர்த்துக் கொள்ள மூன்றாம் தரப்புத் தேவை இல்லை எனக் கூறினார். ஆனாலும் ஜே.ஆரினால் அழைக்கப்பட்ட இந்திய படைகள் வெளியேற வேண்டும் என அந்த பேச்சில் அவர் கூறவில்லை.

ஜே.வி.பி.,விடுதலை புலிகள் இரண்டுமே தர்க்கங்களில் ஈடுபட்டிருந்தமையால், ஸ்ரீலங்கா இராணுவத்தால் ஜே.வி.பியைக் கட்டுப்படுத்த முடியாத பட்சத்தில் இந்தியப் படைகளை பாவிக்கும் எண்ணங்கள் அவருக்கு இருந்தன.அந்த உரையில் விடுதலை புலிகளையும் சமரசத்துக்கு அழைக்கிறேன் என்ற கூறிய நாள் தொட்டு பிரேமதாஸா விடுதலைப் புலிகளுடன் தொடர்பு கொள்ள முயற்சிகள் செய்து, மதியுரைஞருடன் லண்டனில் தொலைபேசி மூலம் பேசினார். சில நாள்கள் நடந்த பேச்சுக்களில் அவர் தமிழ் மக்களின் பிரச்சினைகள் படிப்படியாக அரசியல், இராணுவ, பயங்கரவாத நடவடிக்கைகளால் ஆயுதப் போராட்டமாக மாறியது என்பதைத் தான் உணர்ந்துள்ளார்



எனவும், இவை ஆலோசனைகளில் சமரசமாக, ஒருமித்த கருத்துக்கள் பெற்று தீர்க்கப்பட வேண்டியவை எனவும், அவற்றிற்குப் பேச்சுவார்த்தைகள் முக்கியமானவை என்ற சாரங்களில் அந்த தொலைபேசி உரையாடல்கள் தொடர்ந்தன.

இந்தியப் படைகளை பிரேமதாஸாவின் உதவியுடன் வெளியேற்றலாம் என்றால் அதற்காக அவருடன் பேசவே விடுதலைப் புலிகளும் ஆர்வப்பட்டனர். பேச்சுவார்த்தைகளுக்கு விடுதலைப் புலிகளின் சம்மதம் பிரேமதாஸாவுக்கு தெரிவிக்கப்பட்ட பொழுது இனப்பிரச்சினைக்கு இணக்கத் தீர்வு எந்த வடிவத்தில் அமையும் என்ற நிபந்தனைகள் வைக்கப் படவில்லை. ஆனால் பிரேமதாஸா வெளிப்படையாக இந்தியப்படைகள் தமிழ் பிரதேசங்களை விட்டு வெளியேற வேண்டும் என்ற அறிக்கையைப் பொது வெளியில் தர வேண்டுமென புலிகள் நிபந்தனை வைத்தனர். பிரேமதாஸாவோ அப்படியான அறிக்கை ஒன்றை தராமல், 12 ஏப்ரல் 1989 சிங்கள, தமிழ்ப் புத்தாண்டு ஒட்டி ஒரு தலைப்பட்சமாக யுத்த நிறுத்தத்தை அறிவித்து, ஸ்ரீலங்கா அரசைப் போல இந்தியப் படைகளும் விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்த நிறுத்தத்தை மேற்கொள்ளவேண்டும்என்றஅறிவிப்பையும் முன் வைத்தார்.

விடுதலைப் புலிகளோ தாங்கள் எதிர்பார்த்த மாதிரியான அறிவிப்பு வராததால் கோபமடைந்தனர். பிரேமதாஸாவுக்கு பகிரங்கக் கடிதம் ஒன்றை எழுதினர். அதில் ஒருதலைப் பட்சமான யுத்த நிறுத்தத்தை நிராகரித்து, தமிழ் பகுதிகளில் ஓர் இந்திய இராணுவ வீரன் இருக்கும் வரை அங்கு யுத்தநிறுத்தம் என்ற பேச்சுக்கே இடமில்லை, அவர்கள் வெளியேற வேண்டும் எனவும் வலியுறுத்தினர். பிரேமதாஸா தனது தேர்தல் காலங்களில் கொடுத்த வாக்குறுதிகளை மீறுகிறார் என்ற குற்றச்சாட்டையும் விடுதலைப் புலிகள் முன் வைத்தனர்.

புலிகளின் அதிருப்திகளை புரிந்த பிரேமதாஸாவுக்கு வழமையாக இருந்த தேசப்பற்றும், இந்தியாவின் ஊடுருவல்களில் இருந்த ஆத்திரங்களும், விடுதலைப் புலிகளுக்கு இந்தியப் படைகளுக்கு எதிரான உதவிகளை பணம், ஆயுதங்கள் மற்றும் ஸ்ரீலங்காவின் முகாம்களை பாவிப்பது போன்றவை மூலம் செய்ய முன்வந்தார்.

விடுதலைப் புலிகள் மேலும் திருப்தி அடைய வைக்க 13 ஏப்ரல் 1989 கொழும்பில் பேசிய கூட்டம் ஒன்றில் இந்தியா தனது படைகளை நாட்டை விட்டு மூன்று மாதங்களுக்குள் வெளியேற்ற வேண்டும் எனப் பகிரங்கமாக அறிவித்தார்.

அந்த அறிவிப்பைத் தொடர்ந்து வெளிவகார அமைச்சர் ரஞ்சன் விஜேரத்



President Premadasa and Ranjan
A smooth partnership in Government

தினா விடுதலைப் புலிகளைப் பேச்சுவார்த்தைக்கு வருமாறு அழைப்பு முன்வைத்தார். அந்த அழைப்பைப் புலிகளில் ஏற்று, அதற்கான நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தி, மதியுரைஞரும் அவரது மனைவியும் பேச்சு வார்த்தைகளுக்காக 26 ஏப்ரல் 1989 கொழும்பில் வந்து இறங்கினர்.



ஜே.ஆரினால் அழைக்கப்பட்ட இந்திய படைகளும், அவரது அரசின் தொடர்ந்த திறந்த பொருளாதாரக் கொள்கைகளும் ஜே.வி.பிக்குத் தெம்பு தந்ததால் இந்தியப் படைகளை விடுதலைப் புலிகளின் மூலம் வெளியேற்றி விட்டால், ஜே.வி.பிக்கு ஒரு காரணம் இல்லாமல் போகும், ஜே. வி.பி. தங்களது பொருளாதாரக் கொள்கைகளை எதிர்த்து வன்முறையைப் பாவிக்கிறார் கள் எனக் கூறி, அதனடிப்படை யில் அவர்கள் அடக்கப்பட்டால் மக்கள் அதனை ஏற்றுக் கொள்வார்கள் என்ற எண்ணங்கள் சிங்கள இராணுவத்தை ஒட்டி இருந்தது.

பேச்சு வார்த்தைகளுக்கு வருவதற்கு இந்திய படைகள் வெளியேற்றப்பட வேண்டும் என்ற நிபந்தனையின் நிர்பந்தத்தால் பிரேமதாஸாவினால் பின்னர் இந்திய அரசியலில் நடந்த மாற்றங்களை ஒட்டி அது நடைமுறைப்படுத்தப்பட்டது.

ஆகவே தமிழ் மக்களின் ஏகோபித்த தலைவர்கள் எனத் தம்மை நியமித்துக் கொண்ட தலைவர் களேதான் தங்களது அதிகாரங்களையும் தலைமையையும் தக்க வைத்துக்கொள்வதற்காக இந்தியா உள்நாட்டுப் பிரச்சினையில் இருந்து வெளியேற வேண்டும் என நிர்ப்பந்தித்து, அதனை வெளியேற்றியது என்ற கசப்பான உண்மையைத் தமிழ் மக்கள் ஏற்றுக் கொண்டு தானாகக வேண்டும். ஸ்ரீலங்காவே இதனை வேண்டியது எனக் கண்ணை தமிழர்கள் மூட முடியாது.

கருடன் பாம்புடன் சண்டையிடும் போது அதனை மண்ணில் வைத்துக் கொத்திச் சாகடிப்பதில்லை. அப்படியே அலேக்காகத் தூக்கி வானத்தில் பறந்து, அங்குதான் அதனைத் தீர்க்கும். ஏனெனில் வானத்தில் பாம்புக்கு மண்ணில் இருக்கும் சௌகரியம் இல்லை. அது போல பாம்பாக இருந்த இந்தியப் படைகளுடன் பிரேமதாஸா மோதாமல் விடுதலைப் புலிகளின் கைகளில் விடயத்தை திணித்து முடிவில் அதில் வெற்றியும் பெற்றார்.

(வளரும்...)

காலைக்கதிர் Kalaikkathir

## மொட்டுக் கட்சி தவிசாளராக ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ரஞ்சித் பண்டாரவின் பெயர் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. கோப் குழுவின் தலைவர் பதவிக்கும் ரஞ்சித் பண்டாரவை பொதுஜன பெரமுன பரிந்துரை செய்துள்ளது.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தவிசாளர் பேராசிரியர் ஜி.எல் பீரிஸ் ஆளும் தரப்பில் இருந்து விலகி நாடாளுமன்றில் சுயாதீனமாக செயற்படுவதால் அவரை கட்சி தவிசாளர் பதவியில் இருந்து நீக்கி, அவருடன் சுயாதீனமாக செயற்படும் 13 உறுப்பினர்களுக்கு எதிராக கட்சி மட்டத்தில் நடவடிக்கை எடுக்குமாறு பொதுஜன பெரமுனவின் பின்வரிசை உறுப்பினர்கள் கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசத்திடம் வலியுறுத்தியுள்ளனர் என கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் முக்கிய பதவிகளை மறுசீரமைக்க அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

கட்சியின் பதில் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ தலைமையில் கட்சியை பலப்படுத்தும் நடவடிக்கை தற்போது எடுக்கப்பட்டுள்ளன.

கட்சி நடவடிக்கை குறித்து அதிக அவதானம் செலுத்துவதால் நாமல் ராஜபக்ஷ எதிர்வரும் நாள்களில் நியமிக்கப்படவுள்ள நிலையான அமைச்சரவையில் எவ்வித அமைச்சுக்களையும் கோரவில்லை என கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் 6 ஆவது மாநாடு எதிர்வரும் நவம்பர் மாதம் இரண்டாம் திகதி இடம்பெறவுள்ளது. இந்த மாநாட்டின் போது கட்சியின் முக்கிய பதவிகள் தொடர்பான தீர்மானம் உத்தியோகப்பூர்வமாக அறிவிக்கப்படும்.

## திலீபனின் நினைவு தின .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உருவாக்குவதற்கான ஏற்பாடுகளைக் கவனிக்க முன்னாள் போராளி பஷீர் காக்கா தலைமையில் 7 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது.

தியாக தீபம் திலீபனின் நினைவேந்தலை பொதுக்கட்டமைப்பொன்றினை உருவாக்கி அதன் ஊடாக நிகழ்வு ஏற்பாடுகளை முன்னெடுப்பதற்கான ஆரம்ப கலந்துரையாடல் யாழ்ப்பாணம் நாவலர் மண்டபத்தில் நேற்று சனிக்கிழமை மாலை இடம்பெற்றது.

யாழ்ப்பாண மாநகர சபை முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் சிவில் அமைப்புக்களின் தலைவர்கள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், யாழ்ப்பாண மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள், மூத்த முன்னாள் போராளிகள், மாவீரர்களின் பெற்றோர்கள் எனப் பல தரப்புகளையும் சேர்ந்த 35 பேர் கலந்து கொண்டனர்.

“அரசியல் கலப்பற்ற ஒரு கட்டமைப்பாக இது உருவாக வேண்டும். அரசியல்வாதிகள் தமது அரசியலுக்கு அப்பால் இக்கட்டமைப்பிற்கு ஆதரவாகச் செயற்பட வேண்டும் என்பதே பலரின் கோரிக்கையாக இருந்தது.

முதல் கட்டமாக பொதுக்கட்டமைப்பை உருவாக்குவதற்காக மாவீரர்களின் தந்தையும் மூத்த போராளியுமான பஷீர் காக்கா தலைமையில் மூத்த போராளிகள், பல்கலைக்கழக மாணவர் ஒன்றியப் பிரதிநிதி உள்ளிட்ட ஏழு பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது.

பசீர் காக்கா, செழியன், கோமகன், பார்த்தீபன், ஜோதிலிங்கம், அரவிந்தன், ஜெல்ஸின் ஆகிய 7 பேர் கொண்ட குழுவே நியமிக்கப்பட்டது.

இக்குழு, எதிர்வரும் நாள்களில் மதகுருமார்கள், அரசியல் கட்சித் தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சங்கங்கள், பொது அமைப்புக்கள் என அனைத்துத் தரப்புக்களுடனும் சந்திப்புக்களை மேற்கொண்டு, பொதுக் கட்டமைப்பின் உருவாக்கம், அதன் நோக்கம் , எதிர்காலத்தில் அதன் செயற்பாடுகள் என்பன தொடர்பில் எடுத்துக்கூறி, அவர்களையும் ஒன்றிணைத்து முழுமையான பொதுக்கட்டமைப்பினை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என கலந்துரையாடலில் முடிவெடுக்கப்பட்டது.

## கோணேஸ்வர ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றிரவு ஆரம்பிக்கப்பட்டது.

கடந்த செப்டம்பர் 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நல்லூரில் உள்ள இந்து மாமன்றனத்தின் அலுவலகத்தில், நல்லை ஆதீன முதல்வர் தலைமையில் ஒன்று கூடிய சைவ அமைப்புக்களின் பிரதிநிதிகள் எடுத்த தீர்மானத்துக்கு அமைய இந்த யாத்திரை ஆரம்பிக்கப்பட்டது.

ஈழத்தில் வரலாற்றுச் சிறப்புமிக்க, தேவார பாடல் பெற்ற தலமான திருக்கோணேஸ்வரம் ஆலய நிலம் ஆக்கிரமிக்கப்படுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து, அதைத் தடுக்கும் நோக்கிலான முதல் நடவடிக்கையாக இந்த யாத்திரை முன்னெடுக்கப்படுகிறது.

## மாவீரர்களின் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடக்கம் பொலிகண்டி வரை மக்கள் பேரெழுச்சி இயக்கம் தெரிவித்துள்ளது.

தியாகி திலீபன் நினைவு தினம் ஆரம்பமாகியுள்ள நிலையில் ஆரம்ப நிகழ்வன்று நல்லூர் முன்றிலில் அமைந்துள்ள திலீபன் நினைவாலயத்தின் முன் குழப்ப நிலையை மேற்கோள் காட்டி அறிக்கை ஒன்றை வெளியிட்டு அந்த அமைப்பு இவ்வாறு தெரிவித்துள்ளது. அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:-

தமிழீழ விடுதலை போராட்ட வரலாற்றில் மிக முக்கிய திருப்பத்தை ஏற்படுத்திய, அகிம்சை போராட்டத்தின் உச்சத்தினை தொட்டவர் தியாகி திலீபன். பன்னிரெண்டு நாள்களாக நீர், ஆகாரம் எதுவுமின்றி தன்னையே உருகி தமிழ் இனத்தின் விடுதலை தீயை ஏற்றி வைத்தவர்.

காந்திய தேசதிற்கே அகிம்சையை போதித்த தலைமகன். இவ்வாறாக தியாகத்தின் சிகரமான திலீபன் அவர்களின் 35 ஆவது ஆண்டு நினைவு நாள்களின் ஆரம்ப தினமான 15.09.2022 அன்றும் அதற்கு முன்பாக நடைபெற்ற ஒழுங்குபடுத்தல் நிகழ்வுகளின் போதும் இடம்பெற்ற கட்சி அரசியல் ரீதியான முறுகல் நிலை தமிழ் தேசியத்தின் பால் பற்றுறுதி கொண்ட அனைவருக்கும் அதிர்ச்சியையும் கவலையினையும் ஏற்படுத்தியுள்ளது.

தியாகி திலீபன் அறப்போரினை நடத்தி ஆகுதியான நல்லூர் மண்ணிலேயே இச்சம்பவங்கள் நடைபெற்றமை மிக வேதனை அளிப்பதாக உள்ளது. அளவிட முடியாத தியாகத்தினை எவருமே தமது வாக்கு அரசியலுக்கு பயன்படுத்துவத்தினை ஒருபோதும் அனுமதிக்க முடியாது.

அத்துடன் நினைவு நிகழ்வின் போது ஒரு மாவீரரின் தந்தையும், தியாகி திலீபன் அவர்களின் உண்ணாவிரத போராட்டத்தில் கூட இருந்தவரும், நீண்ட நெடிய போராட்ட வரலாற்றை கொண்ட மூத்த போராளி ஒருவர் அவமதிக்கப்பட்ட சம்பவத்தை வன்மையாக கண்டிக்கின்றோம். ஒரு மாவீரரின் வணக்க நிகழ்வில் இன்னொரு மூத்த போராளியை அவமதிப்பதினை ஏற்றுகொள்ள முடியாது.

பார்த்தீபன் இன்னமும் பசியுடனேயே இருக்கின்றான். 35 வருடங்கள் கடந்தும் தியாகி திலீபன் அவர்களின் கோரிக்கைகள் நிறைவேறாத நிலையில், எமது உரிமைகளை இழந்து, எமது நிலங்கள் எங்களில் எதிரியினால் தொடர்ச்சியாக ஆக்கிரமிக்கப்படும் மிகவும் நெருக்கடியான காலகட்டத்தில் உள்ளோம்.

தமிழினமே ஓரணியாக அணிதிரண்டு போராடவேண்டிய காலத்தின் கட்டாயத்தில் உள்ளோம். ஆகவே அனைவரும் எதிர்வரும் காலங்களில் இவ்வாறான விரும்பத்தகாத சம்பவங்களை தவிர்த்து, அனைவரும் நினைவெழுச்சி நிகழ்வுகளின் புனிதத்தை களங்கப்படுத்தாத வகையில் நடந்து கொள்ளுமாறு உரிமையுடன் கேட்டுகொள்கின்றோம். நினைவெழுச்சி நிகழ்வுகள் எந்தவொரு அரசியல் கட்சியினதும் தனியுரிமை சொத்தல்ல. இந்நிகழ்வுகள் மக்கள் மயப்படுத்தப்பட்டு மக்களின் முன்னெடுப்பில் நடைபெறுவதாகவே அமைய வேண்டும்.

தியாக தீபம் திலீபன் அவர்களின் நினைவேந்தலுக்கான பொது கட்டமைப்பு தொடர்பான 17 ஆம் திக்கதிய கூட்டம் தொடர்பான யாழ். மாநகர முதல்வரின் அழைப்பு எமக்கும் கிடைக்கப் பெற்றது. ஆயின் நாம் மேலே குறிப்பிட்டது போல் நினைவெழுச்சி நிகழ்வுகள், அதற்கான பொது கட்டமைப்பு என்பன கட்சி அரசியலை கடந்து பொது சமூகமாகிய மாவீரர்களின் பெற்றோர்கள், பாதிக்கப்பட்ட தரப்பினர்கள், மத தலைவர்கள், புத்திஜீவிகள், மாணவர்கள், சிவில் சமூகத்தினர், பொது மக்கள் அடங்கியவர்களின் முன்னெடுப்பிலேயே கட்டமைக்கப்படவேண்டும்.

இவ்வாறான முன்னெடுப்பினை மேற்கொள்ளும் பொது சமூக தரப்பிற்கே எமது பரிபூரணமான ஆதரவு இருக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம். இதற்கு மேலும் இவ்விடயத்தை அரசியல் காழ்ப்புணர்ச்சிகளை தீர்த்து கொள்ளும் களமாக பயன்படுத்திக் கொள்ள வேண்டாம் என அனைத்துத்தரப்பினரிடமும் உரிமையுடன் கேட்டுகொள்கின்றோம்.

தியாகி திலீபன் அவர்களில் இலட்சிய வாக்குக்கு அமைய மக்கள் புரட்சி வெடிக்கட்டும், சுதந்திர தமிழீழம் மலரட்டும் எனும் தாகத்துடன் தொடந்து பயணிப்போம் என உறுதி எடுத்துக்கொள்வோம் என குறிப்பிடப்பட்டுள்ளது. - என்று உள்ளது.

## வட்டுக்கோட்டை .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேதமானது. அதில் பயணம் செய்த இரு பெண்கள் அருந்தப்பில் தப்பினர்.

மாதகலை சேர்ந்த சித்தியும் (வயது 39) பெறா மகளும் (வயது 20) அராலியில் உள்ள உறவினர்களது வீட்டிற்கு பிறந்தநாள் கொண்டாட்டத்திற்குச் சென்றுவிட்டு வீட்டுக்குச் சென்றுகொண்டிருந்தனர்.

காரைநகரில் இருந்து யாழ்ப்பாணப் பக்கமாக சென்று பயணித்துக் கொண்டிருந்த டிப்பர் வாகனம் வட்டுக்கோட்டை சந்தியடியில் மோட்டார் சைக்கிள் மீது மோதியது.

இதனால் மோட்டார் சைக்கிள் பகுதியளவில் சேதமாகியுள்ளது. தெய்வாதீனமாக மோட்டார் சைக்கிளில் பயணித்த இரண்டு பெண்களுக்கும் காயங்கள் எதுவும் ஏற்படாமல் தப்பினர்.

சம்பந்தப்பட்ட டிப்பர் சாரதி வட்டுக்கோட்டைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை வட்டுக்கோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## உயிரிழந்த நிலையில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயிரிழந்த காணப்பட்ட யானையை பிரதேச வாசி ஒருவர் அவதானித்து வாழைச்சேனை பொலிஸாருக்கு வழங்கிய தகவலையடுத்து கிரான் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

யானை உயிரிழந்தமைக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை. இது தொடர்பான அறிக்கையை வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் வழங்கிய பின்னரே யானை எதனால் மரணமடைந்துள்ளது என்பது தொடர்பான விசாரனைகள் மேற்கொள்ளப்படும் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

## கையெழுத்துப் பேரணி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னெடுத்துவரும் காங்கேசன்துறை முதல் அம்பாந்தோட்டை வரை இடம்பெறும் வாகன வழி கையெழுத்து வேட்டை நேற்று 17 ஆம் திகதி திருகோணமலை சிவன் கோயிலடி மற்றும் அநுராதபுரம் சந்தி, கிளிவெட்டி போன்ற இடங்களில் இடம்பெற்றது.

இதில் பெருமளவான மக்கள் கையெழுத்துக்களை இட்டு தமது ஆதரவை வழங்கினர்.

## ஓமந்தையில் ரயில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஓமந்தை, விளக்குவைத்தகுளம் பகுதியில் பயணித்த போது பாதையில் இருந்த குடும்பஸ்தர் ஒருவரை மோதித் தள்ளியது.

விபத்தில் சம்பவ இடத்திலேயே குறித்த குடும்பஸ்தர் மரணமடைந்தார். சடலம் ரயில்வே திணைக்கள உத்தியோகத்தர்களால் மீட்கப்பட்டு, வவுனியா ரயில் நிலையத்தில் வைத்து பொலிஸாரிடம் கையளிக்கப்பட்டது.

பொலிஸாரால் சடலம் வவுனியா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

சம்பவத்தில் ஓமந்தை விளக்குவைத்தகுளம் பகுதியைச் சேர்ந்த 4 பிள்ளைகளின் தந்தையான எஸ்.நகுலன் என்பவரே மரணமடைந்தார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம் -
076 443 8622
kalaikathiradvt@gmail.com



# தமிழர்களுக்கான அரசியல் தீர்வுக்கு பொதுவாக்கெடுப்பே நடத்தவேண்டும்!

## நாடு கடந்த தமிழீழ அரசு வலியுறுத்து

ஜெனீவாவில் நடைபெற்று வரும் ஐ.நா மனித உரிமைச்சபையின் 51ஆவது கூட்டத் தொடரில், இனப் பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வைக் கொண்டு வரவும், தமிழ் மக்களுக்கு எதிரான கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலையைத் தடுக்கவும், சர்வதேசத்தின் கண்காணிப்புடன் கூடிய பொதுவாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்று நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் எடுத்துரைத்துள்ளது.

கூட்டத் தொடரின் ஐந்தாம் நாளான செப்ரெம்பர் 16 வெள்ளிக்கிழமை இடம்பெற்றிருந்த (Special Rapporteur on the promotion of truth, justice, reparation and guarantees of non-recurrence) உண்மை, நீதி, இழப்பீடு மற்றும் மீண்டும் நிகழாத உத்த ரவாதங்கள் தொடர்பிலான ஐ.நாவின் சிறப்பு அறிக்கை யாளர் அறிக்கை தொடர்பான கருத்தாடலிலேயே இந்தக் கருத்து முன்வைக்கப்பட்டுள்ளது.

காணொளி வாயிலாக பங்கெடுத்திருந்த நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் அனைத்துலக விவகாரகளுக்கான அமைச்சர் மகிந்தன் சிவசுப்ரமணியம், தமிழர்கள் என்ற ஒரே காரணத்துக்காக இலங்கைத்தீவில் பாரிய அட்டூழியங்களை எதிர்கொண்டவர்கள் என்ற வகையில் தமிழர்களுக்களாகிய எமக்கு, ஐ.நாவின் உண்மை, நீதி, இழப்பீடு மற்றும் மீண்டும் நிகழாத உத்தரவாதங்கள் தொடர்பிலான சிறப்பு அறிக்கையாளரது அறிக்கை மிகவும் முக்கியமானது எனத் தெரிவித்திருந்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில் –

ஐ.நாவின் உள் ஆய்வு அறிக்கையின்படி, இலங்கையின் போரின் இறுதி ஆறு மாதங்களில் சுமார் 70 ஆயிரம் தமிழர்கள் கொல்லப்பட்டனர் அல்லது வலிந்து காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர்.

இந்தப் பாரிய குற்றங்கள் காரணமாகவே ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சிறிலங்காவின் சூழலை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்குப் பாரப்படுத்துமாறு பரிந்துரைத்து அழைப்பு விடுத்திருந்தார். இதற்கு முன்னர் இருந்த அனைத்து ஐ.நா. மனித உரிமை ஆணையாளர்களும் இதனை வலுப்படுத்தியுள்ளனர்.

சிறிலங்காவை அனைத்துலக குற்றவியல் நீதிமன்றுக்கு பரிந்துரைக்கப்படாவிட்டால், தமிழர் பகுதிகளில் நிலைகொண்டுள்ள மிகப் பெரிய எண்ணிக்கையிலான சிறிலங்கா இராணுவத்தினர் எந்த தயக்கமும் இல்லாமல் தமிழர்களுக்கு எதிராகப் பாரிய மனித உரிமை மீறல்களுக்கு பொறுப்பேற்க வேண்டிய தேவை இல்லை என்ற நிலையில், அதனைச் செய்யத் துணிந்து விடுவார்கள்.

இவைகள் மீண்டும் நிகழாமல் இருப்பதற்கு முன்னராக மேற்கொள்ளப்பட்ட அரசியல் தீர்விற்கான சர்வதேச மத்தியஸ்தம் உட்பட பல முயற்சிகள் தோல்வியடைந்துள்ளன. நீண்ட காலமாக நீடித்து வரும் இனப் பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வைக் கொண்டு வரவும், தமிழ் மக்களுக்கு எதிரான கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலையைத் தடுக்கவும், சர்வதேசத்தின் கண்காணிப்புடன் கூடிய பொதுவாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்று தமிழர்மக்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர் என அமைச்சர் மகிந்தன் சிவசுப்ரமணியம் தனதுரையில் தெரிவித்திருந்தார்.




நடைபெற்று வரும் ஐ.நா கூட்டத் தொடரில் தமிழர்களின் நீதிக்கும் அரசியல் இறைமைக்குமான போராட்டத்தை வெளிப்படுத்தும் வகையில் கருத்துரைகளை சபையில் தொடர்சியாக வெளிப்படுத்தி வருகின்றமை இங்கு குறிப்பிடதக்கது.

## தற்போதைய ஆட்சியாளர் நாட்டின் ஊழல்களை சர்வதேசத்தின் முன் ஒப்புக்கொள்ள வேண்டும்!

### உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி கோரிக்கை



நாட்டின் ஊழல்களை தற்போதைய ஆட்சியாளர்கள் சர்வதேச சமூகத்தின் முன் உத்தியோகபூர்வமாக ஒப்புக் கொள்ள வேண்டும் என மக்கள் விடுதலை முன்னணி யின் அரசியல் குழு உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்துள்ளார்.

மீகொட பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நாடு தற்போது பொருளாதாரக் கொலைகாரர்களால் கட்டியெழுப்பப்பட்ட அரசாக மாறியுள்ளதாகவும் இதன் காரணமாக சர்வதேச நாணய நிதியத்தின் முன் மண்டியிட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் சுனில் ஹந்துன்நெத்தி மேலும் தெரிவித்துள்ளார்.






## கட்டுநாயக்கவுக்கு வந்த இசைஞானி இளையராஜா!

இசைஞானி இளையராஜா உட்பட அவரது இசைக் குழுவினர் சென்னையில் இருந்து கொழும்பு வழியாக ஆஸ்திரேலியா புறப்பட்டுச் சென்றுள்ளனர்.


கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வந்திறங்கிய இசைஞானி இளையராஜா உட்பட இசைக்குழுவினருக்கு ஸ்ரீலங்கன் விமான சேவையின் ஊழியர்கள் சிறப்பான வரவேற்பை வழங்கினர் என விமான சேவை நிறுவனம் தனது டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளது.

ஆஸ்திரேலியா சிட்னி மற்றும் மெல்பேர்ன் நகரில் இன்றும், நாளையும் நடைபெறும் இசை நிகழ்ச்சியில் பிரபல திரைப்பட பின்னணி பாடகர் மனோ, பாடகர் எஸ்.பி.பி.சரண், பாடகி சுவேதா மோகன், பாடகர் மது பாலகிருஷ்ணன் உட்பட பல இசை கலைஞர்கள் கலந்துகொள்ள உள்ளனர்.

இவர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தின் ஊடாக ஆஸ்திரேலியா புறப்பட்டுச் சென்றுள்ளனர்.

## காலி முகத்திடலில் உள்ள கட்டடங்களுக்கு போராட்டக்காரர்களால் 60 லட்சம் ரூபா சேதம்!

### அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா கூறுகிறார்



போராட்டக்காரர்களால், காலி முகத்திடலில் உள்ள கட்டடங்களுக்கு 60 லட்சம் ரூபா சேதம் ஏற்பட்டுள்ளதாக அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

இலங்கை துறைமுக அதிகார சபையால் மக்களின் நலனுக்காக அமைக்கப்பட்டுள்ள கடைகள், இருக்கைகள், சுவர்கள் மற்றும் ஏனைய கட்டமைப்புகளுக்கு ஏற்பட்ட சேதங்களை மதிப்பிடும் ஆய்வு விஜயத்தின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பழுதடைந்த கடைகளை விற்பனையாளர்களிடம் ஒப்படைப்பதற்கு முன்னர், அவற்றைப் புனரமைப்பதற்கான செலவை இலங்கை துறைமுக அதிகாரசபை ஏற்க வேண்டும் என்று அமைச்சர் கூறினார்.







யாழ் இந்துக் கல்லூரியில் நவராத்திரி நிகழ்வை முன்னிட்டு தரம் 6 தொடக்கம் உயர்தரம் வரையிலான மாணவர்களிற்கு மாலை கட்டுதல் மற்றும் தோரணம் பின்னுதல் போட்டிகள் நடைபெற்றது.





# நிர்மாண மற்றும் ரியல்எஸ்டேட் துறையின் தற்போதைய நிலை



நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் நிர்மாணத் துறை எப்போதும் 7.1 வீத வளர்ச்சியுடன் முக்கிய பங்கு வகிக்கிறது. நிர்மாணத் துறையில் ஒரு மில்லியனுக்கும் அதிகமான தொழிலாளர்கள் தற்போது பணிபுரிகின்றனர். ஆனால் நிலைமைகள் எப்போதும் இவ்வாறு சாதகமாக இருப்பதில்லை. உலகப் பொருளாதாரத்தில் உக்ரைன் போர் மற்றும் அதைத் தொடர்ந்து ஏற்பட்ட எரிபொருள், எரிசக்தி மற்றும் மூலப்பொருள்களுக்கான தட்டுப்பாடு போன்ற பல தடைகளைக் கையாள்வதில், நிர்மாண மற்றும் ரியல் எஸ்டேட் துறையும் சவால்களை எதிர்கொண்டுள்ளன. இதனால் சிறிய அளவில் நிர்மாணப் பணிகளை மேற்கொண்டோர் தொழிலைக் கைவிட்டு வெளியேறினர். இன்னும் பலர் அதிக ஆபத்துள்ள 'ஹிட் அண்ட் ரன்' அணுகுமுறையை உருவாக்கியுள்ளனர், இது வளங்களின் பற்றாக்குறை காரணமாக அவர்களது வாடிக்கையாளர்கள் மற்றும் பொது மக்களின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வுக்கு குறிப்பிடத்தக்க அச்சுறுத்தலை ஏற்படுத்துகிறது. ஆனால், இவ்வாறான மிகவும் கொந்தளிப்பான காலங்களிலும் சிலர் நிர்மாணத்துறையை தம்வசம் வைத்திருந்தனர். அனுபவமின்மையின் தோல்விகளை அவர்கள் புரிந்துகொண்டனர். சிக்கலான நேரங்களில் கூட தரம் மற்றும் பாதுகாப்பு என்பன சமரசம் செய்யக்கூடிய வியங்கள் அல்ல என்பதை அவர்கள் புரிந்துகொண்டிருந்தனர்.




கடந்த சில மாதங்களில், கட்டுமான மூலப்பொருள்களின் விலைகள் 200 வீதத்துக்கும் மேல் அதிகரித்துள்ளன. இது மிகவும் ஏற்ற இறக்கமான மெக்ரோ பொருளாதார சூழலை பிரதிபலிக்கிறது. உலக சந்தையில் அதிகரித்து வரும் எண்ணெய் மற்றும் எரிவாயு விலைகள் மற்றும் நீண்ட காலக் கடன்களுக்கு அதிக வட்டி அறவிடல் மற்றும் சரக்கு கட்டணங்கள் அதிகரித்தல் என்பனவற்றால் மூலப்பொருள்களுக்கான செலவீனம் கணிசமாக அதிகரித்தது. இந்த தொடர்ச்சியான அதிகரிப்பு காரணமாக, உற்பத்தியாளர்களும் வர்த்தகர்களும் காலாண்டு முழுவதும் கட்டுமானப் பொருள்கள் உட்பட மூலப் பொருள்களுக்கான விலைகளை அதிகரித்தனர், இதன் விளைவாக நிர்மாணப் பணிகளில் மந்தநிலை ஏற்பட்டது, இதனால் சந்தையில் அவற்றுக்கான விலை ஸ்திரப்படும்வரை புதிய திட்டங்களை தொடங்குவது ஒத்திவைக்கப்பட்டது.



வீட்டுக் கடன் வட்டி விகிதங்கள் தற்போது அதிகபட்சமாக 22 வீதம்ஆக அதிகரித்துள்ளது. இது முதல் முறையாக வீடு வாங்க எண்ணுபவர்களின் சொத்து வாங்கும் முடிவுகளை எதிர்மறையாகப் பாதிக்கிறது. எவ்வாறாயினும், மத்திய வங்கி மார்ச் 2022இல் இலங்கை நாணயத்தை மிதக்கவிட முடிவு செய்ததாலும், டொலரின் பெறுமதி அதிகரித்ததாலும் பொருளாதாரப் பேரிடர்களுக்கு எதிரான பாதுகாப்பாக கட்டி முடிக்கப்பட்ட மற்றும் நிர்மாணப்பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் தொடர்மாடி வீட்டுத் திட்டங்களுக்கான கேள்வி முதன்மை மற்றும் இரண்டாம் நிலை சந்தைகளில் விரைவாக அதிகரித்துள்ளது. ரூபாயின் பெறுமதி வீழ்ச்சி மற்றும் அதிகரித்த டொலர் பெறுமதி காரணமாக வெளிநாடுகளில பணிபுரியும் இலங்கையர்கள் பலர் ரியல் எஸ்டேட் சந்தையில் அதிக ஆர்வம் காட்டியுள்ளனர்.

மேற்கூறியவற்றைத் தவிர, வெளிநாட்டு முதலீட்டாளர்களை ஈர்ப்பதற்காக ஏப்ரல் 2022 இல் கோல்டன் விசா திட்டத்தையும் அரசாங்கம் அறிமுகப்படுத்தியது, அங்கு 100,000 அமெரிக்க டொலருக்கு மேல் முதலீடு செய்யும் எவருக்கும் 10 ஆண்டு குடியிருப்பு விசா வழங்கப்படுகிறது, இது ஒரு சிறந்த அணுகுமுறையாகும். எவ்வாறாயினும், குடியிருப்புகள் மீதான பெறுமதி சேர் வரியில் (வற்) வழங்கப்பட்ட விலக்கு அக்டோபர் 1, 2022 முதல் அகற்றப்படும். வற் விதிக்கப்படும் நிகழ்தகவைக் கருத்தில் கொண்டால் எதிர்காலத்தில் அடுக்குமாடிக் குடியிருப்புகளைக் கட்டுவோரிடமிருந்து நேரடியாக அவற்றை வாங்கும் போது விலைகள் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எதிர்காலத்தில், அடுக்குமாடி வீடுகளை வாங்குபவர்களுக்கும் முதலீட்டாளர்களுக்கும் வற் அதிகரிப்பு அமுலாகும் முன்னர் அடுக்குமாடி குடியிருப்புகளில் முதலீடு செய்வதற்கு இது ஒரு நல்ல நேரமாகும்.

### புளூ ஒன் குழுமம் வளர்ச்சி மற்றும் பன்முகத்தன்மைக்காக பாடுபடும் மாபெரும் அமைப்பு

புளூ ஒன் குழுவானது ஒருமைப்பாடு, தரம், ஒழுக்கம், நேர்மை, நெகிழ்வுத்தன்மை, பாதுகாப்பு மற்றும் சிறந்தசேவை ஆகியவற்றுக்கான அர்ப்பணிப்பிற்காக அறியப்படுகிறது. அதன் தலைவர் திரு. சிவராஜா துமிலன் தலைமையில், குழுமமானது வரவிருக்கும் சவால்களை முன்னரே முன்னறிவித்திருந்ததுடன், தொழில்ரீதியாகத் தகுதியும் அனுபவமும் வாய்ந்த கூட்டாண்மைத் திட்டமிடலாளர்களின் ஆதரவுடன் தெளிவான மூலோபாயப் பாதையை அமைத்திருந்தது.

புளூ ஒன் குழுமத்தின் மூலோபாயம் மிக்க தலைமையின் சாமர்த்தியத்தால், பொது மக்களுக்கும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கும், நாட்டின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் நியாயமான விலையில் தரமான அடுக்குமாடி குடியிருப்புகளை வழங்கும் கொள்கையை, ஒப்பீட்டளவில் எளிதாகத் தொடர முடிந்தது. குழுவின் முன்னுரிமையானது, அவர்களின் ஏற்கனவே உள்ள ஸ்திரமான கேள்வியை செயல்படுத்துவது, இது கவர்ச்சிகரமான பண உட்பாய்ச்சலுடன், வரவிருக்கும் ஆண்டுகளில் அதிக வருவாயை ஈட்டித் தரும் என்று கணிக்கப்பட்டுள்ளது. அதே நேரத்தில் இது பொருளாதார ஏற்ற இறக்கங்களுக்கு மத்தியில் குழமத்துக்கு ஒரு வலுவான அடித்தளத்தை வழங்குகிறது.

புளூ ஒன் குழுமம் கொழும்பு, கல்கிசை மற்றும் நுவரெலியா ஆகிய இடங்களில் தற்போதுள்ள உயர்மட்ட திட்டங்களில் தொடர்ந்து பணியாற்றி வருகிறது. கல்கிசை, டி சாரம் வீதி மற்றும் கொழும்பு 05, ஹைவ் லொக் பிளேஸ் ஆகிய இடங்களில் புதிய அதிநவீன உயர்மட்டத் திட்டப் பணிகளை ஆரம்பிக்கவுள்ளது. இது கட்டுமானத் துறையில் முன்னணி ரியல் எஸ்டேட் நிறுவனமாக அதனை நிலைநிறுத்தும்.

### Link Engineering
### கட்டுமான ஜாம்பவான்

ப்ளூ ஓன் குழும நிறுவனங்களின் கட்டுமானப் பிரிவான லிங்க் என்ஜினியரிங் (பிரைவேட்) லிமிட்டெட் 40 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவத்துடன், கட்டுமானத் துறையில் முன்னணி நிறுவனமாக தன்னை உறுதிப்படுத்திக் கொண்டுள்ளது. அனைத்து கட்டுமான மற்றும் பொறியியல் செயல்பாடுகளிலும் லிங்க் என்ஜினியரிங் குறிப்பிடத்தக்க வளர்ச்சியை பதிவு செய்துள்ளது, குறிப்பாக அரசாங்க உட்கட்டமைப்பு மேம்பாட்டிற்கு பங்களிக்கிறது. இந்நிறுவனம் தற்போது உள்ளூர் மற்றும் இந்திய அரசாங்க நிதியுதவியுடன் பல்கலைக்கழகங்கள் முதல்,நகர்ப்புற சொகுசு குடியிருப்புகள் வரை ஏராளமான கட்டுமானத் திட்டங்களில் ஈடுபட்டுள்ளது. Blue Ocean குழுமத்தின் உறுப்பினராக, Link Engineering ஏற்கனவே யாழ்ப்பாணம், திருகோணமலை, கண்டி, கம்பஹா, கொழும்பு, நுவரெலியா போன்ற இடங்களில் பல தொடர்மாடி குடியிருப்புகள் மற்றும் அரசாங்க நிர்மாணங்களுக்கு 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டிற்கான சிறந்த நிதித் திட்டத்தை வழங்கியுள்ளது.

கடந்த பத்தாண்டுகளில், கட்டுமானத் துறையில் அரசாங்கத்தின் நிதியுதவியுடன் கூடிய திட்டங்கள் முக்கியப் பங்காற்றியுள்ளன. லிங்க் இன்ஜினியரிங் இத்திட்டங்களில் தனது பங்கை வெற்றிகரமாகக் நிறுவியுள்ளது. அண்மையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சி அறிவியல் நகரில் அமைந்துள்ள பொறியியல் தொழில்நுட்ப பீடம் மற்றும் உயிரியல் அமைப்பு தொழில்நுட்பக் கட்டடம், என்பற்றின் கட்டுமானப் பணிகளை நிறைவு செய்திருந்ததுடன், 2022 ஒகஸ்ட் 18ஆம் திகதி கௌரவ. அமைச்சர்கள் மற்றும் ஏனைய சிறப்பு விருந்தினர்களால் திறந்து வைக்கப்பட்டது. இது பல்கலைக்கழகத்தின் மிகப்பெரிய கட்டடம் இது, அதன் வடிவமைப்பு மற்றும் நேர்த்தி எனும் திறமைகளால் ஏனைய கட்டடங்களிலருந்து வேறுபடுகிறது. இது பல அதிநவீன வசதிகள் கொண்டதான லிங்க் இன்ஜினியரிங் நிபுணர்களால் கவனமாகவும் பொருத்தமாகவும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு சொந்தமான வாடிக்கையாளர் பராமரிப்பு நிலையத்தையும் நிறுவனம் இந்த ஆண்டு ஜனவரிமாத தொடக்கத்தில் ஒப்படைத்தது. கண்டி பள்ளேகலையில் அமைந்த நடனப் பயிற்சிக் கட்டடமும் கட்டுமானப் பணிகள் நிறைவுற்று ஒப்படைப்பதற்குத் தயாராக உள்ளது. இதுவொரு, உயர் தாக்க சமூக அபிவிருத்தித் திட்டமாகும் (HICDP). இத்திட்டத்தில் பல்நோக்கு மண்டப நிர்மாணம், தளபாடங்கள், அலுவலக உபகரணங்கள், இசைக் கருவிகள் விநியோகம் போன்றன அடங்கும். இந்த திட்டம் இலங்கை மற்றும் இந்திய மக்களை பிணைக்கும் வலுவான மத மற்றும் கலாசார இணைப்புகளை மேம்படுத்துவதற்கான இந்திய அரசாங்கத்தின் தொடர்ச்சியான அர்ப்பணிப்பின் மற்றொரு வெளிப்பாடாகும். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவப் பீடத்துக்கான எட்டு மாடிக் கட்டடத்தையும் Link Engineering நிறுவனம் கையளிக்கவுள்ளது. இது யாழ்ப்பாண நகரத்தின் மிக உயரமான கட்டிடம் மற்றும் அண்ணளவாக 800 மில்லியன் ரூபா பெறுமதியானது.

### Aiming for excellence
### சிறப்பாகச் செயற்படுவதை நோக்கமாகக் கொண்டது

தங்களின் ஊழியர்கள், வாடிக்கையாளர்கள், விநியோக சங்கிலி முதலீட்டாளர்கள் மற்றும் சமூகத்தின் மத்தியில் மிகவும் நெறிமுறையான திறமையான மற்றும் நம்பகமான நிறுவனமாக தனது நற்பெயரை உருவாக்க, பராமரிக்க, பாதுகாக்க மற்றும் மேம்படுத்த குழுவின் அர்ப்பணிப்பு சந்தையில் அதன் நிலையைப் பாதுகாத்தது. தொழில்துறையில், கூட்டாண்மைப் பொறுப்புக்கான அதன் வலுவான அணுகுமுறை, பட்ஜெட்டுக்குள் மிக உயர்ந்த தரத்தை வழங்குவதை உறுதி செய்துள்ளது. அவர்களின் அடித்தளம் பல ஆண்டுகளாக விசுவாசம், நம்பிக்கை மற்றும் உறுதிப்பாடு ஆகியவற்றால் கட்டப்பட்ட உறுதியான ஒன்றாகும், இது சமீபத்திய நிச்சயமற்ற பொருளாதார நிலையிலும் உயர்ந்து நிற்க உதவுகிறது.

சுற்றுச்சூழலுக்கு இசைவான மூலப்பொருள் மற்றும் நிலையான சந்தை கண்காணிப்பை நடைமுறைப்படுத்துவதற்கும் வாடிக்கையாளர் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்வதற்கும் மிகவும் செலவு குறைந்த தீர்வுகளை பயன்படுத்துதல், உயர் தரமான, நிலையான வாடிக்கையாளர் அனுபவத்தை வழங்குவதற்காக, நிலையான கண்காணிப்பு மூலம் தயாரிப்பு மற்றும் சேவையின் உயர் தரத்தை உறுதிசெய்ய குழுமம் அதன் வளங்களை அர்ப்பணிக்கிறது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 18.09.2022இல் வெளியிடப்பெற்றது.